18

# கடவுள் முளைத்தார்

187



R34
N48
111684

லப்பதிப்பகம்

# கடவுள் முளைத்தார்

★

ஆசிரியர்
ரா. தணலன்

★

எரிமலைப் பதிப்பகம்
துறையூர் ★ திருச்சி ஜில்லா

எரிமலை வெளியீடு 6
முதல் பதிப்பு ஏப்ரல் 1948
உரிமை ஆசிரியருடையது


விலை அணா 0-14-0

ஸ்டார் பிரஸ், துறையூர்.
திருச்சி ஜில்லா (பிரதிகள் 1000)

## கையுறை

சமுதாய வாழ்க்கைச்
சீர்பெற வேண்டும் என்றே
அல்லும் பகலும் துடிதுடித்தவர்.
தம் ஆருயிர் வாழ்வை அதற்காகவே
கையுறையாக அளித்தும்
வெளி உலகால் காணப்படாமல்,
அரும்பாத முல்லையாகப்
பருவம் அவிழ்ந்து மணம் வீசும் முன்
உலகை நீத்தவர்,
எனது இன்றைய வளர்ச்சிக்கு
அடிப்படையில் காரணமாயிருந்தவர்
என் ஆருயிர்த் தோழர்
**எஸ். ஆர். ராமு அவர்களுக்கு**
இந்நூல் என் சிறு காணிக்கை

ரா. தணலன்



ரா. தனலன்

# ரா. தணலன்

இளைஞர், கவிதா உள்ளம் படைத்தவர். மனிதன் மனிதனுக வாழ வேண்டும் என விரும்பும் லட்சியவாதி. அறிவும், ஆற்றலும் அடக்கமும், சிந்திக்கும் திறனும், வாதிக்கும், தன்மையும் ஒருங்கே அமையப்பெற்ற தோழர் தணலன் சொல்கிறுர்,

> " மனிதன் வாழியவே — வாழ்வின்
> மன்னனும் என்பதனுல் "

இது தோழரின் கவிதைத் தொகுதி ஒன்றின் கடைசிப் பாடல். வாழ்த்துப் பாடியவர் பலர், பலரகம். உலகம் தோன்றிய அன்னுள் முதல் தோன்றிய அத்தனைக் கவிஞர்களும், வாழ்த்துப்பாக்கள் புனைந்துள்ளனர். நாட்டை, நல்லறத்தை, மன்னனை, மேன் மக்களை, முது புலவரை, மொழியை வாழ்த்துதல் கவிஞர் மரபு. தணலன் தமது கவிதைத் தொகுதி மூலம் மனிதனுக்கு வாழ்த்துக் கூறும் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைக்கிறுர்.

இந்த கோணத்திலிருந்து பார்க்க ஆரம்பித்தால் தான் தோழர் தணலனைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். அவரின் கொள்கைகளின் பிறப்பிடத்தை, அவற்றின் அழுத்தத்தின் காரணத்தை, அவை சொல்லப் படும் எழுத்தின் வேகத்தை உணர்ந்துகொள்ளமுடியும்.

"தணலன் ஒரு தத்துவக் கவிஞர்" வேறு எப் படிச் சொல்வதைக் காட்டிலும் இப்படிச் சொல்வதன் மூலமே அவரைச் சரியானபடி அறிமுகம் செய்துவைக்க முடியும் என்பது என் கருத்து. தத்துவங்களைப் புரிந்து

கொள்வதில் மக்களுக்கு ஏற்படும் கடினம்தான் அவரை இத்தனை நாள் நம்மிடம் இருந்து விலக்கி வைத்திருந்தது.

தோழர் தணலனை அறிந்தவர் சிலரே, அவரை அறிந்தவர்கள் அத்தனை பேரும் அவருடைய எழுத்துக்கள் நாட்டுக்கு உதவவேண்டும் என்று விரும்பினர்கள், என்றாலும் அவற்றின் தன்மை அவர்களையே அஞ்ச வைப்பதாக இருந்தது. ஆனால் அவை அனைத்தும் ஆழ்ந்த அழியாத தத்துவங்கள், காலத்தால் கரைபடுத்தப்பட முடியாத உண்மைகள் என்பதை அனைவரும் அறிந்தே இருந்தனர்.

அவருடைய குறுக்கு வெட்டு வாதங்கள், விவாதிப்பவரை மடங்கிப் போகச் செய்வன. மூலத்தின் மூலத்திலிருந்தே தொடங்கி, தொடங்கும் போதும் அந்த மூலத்தின் நியாய அநியாயத் தன்மையை, நிஜபோலித் தன்மையை நறுக்கிக்காட்டும்பொழுது எதிர்த்துப் பேசுபவர்கள் திக்கு முக்காட வேண்டி வரும். இந்த விவாதிக்கும் தன்மையின் அழுத்தத்தை இந்த நூலைப் படிப்பவர்கள் அறிந்துகொள்ளலாம்.

தணலனின் அழுத்த குணம் அவருடைய எழுத்தில் மட்டுமன்றி-அவருடைய சொந்த வாழ்க்கையிலும் அது எவ்வாறு ஊறிப்போயிருக்கிறது என்பதை அவரை அறிந்த ஒவ்வொருவரும் அறிவர். உடும்புப் பிடியை விடுவித்து விடலாம். தணலனின் அழுத்த குணத்தை அசைப்பது ஆகாத காரியம். இந்த அழுத்தம்தான்-இந்த கொள்கைப் பிடிவாதம்தான் அவரை இதுவரை முன்னேற விடவில்லை. என்பது என் எண்ணம். வாழ்க்கையில் எத்தனைக் கட்டங்கள் தணலனை கைமாற்றி யிருக்கின்றன என்பவை கேட்

கத் திடுக்குறச் செய்யும் செய்திகள். தோல்விமேல் தோல்வி ஏற்பட்டும் இடைவிடாது போராடும் குணம் மிகச் சிலரிடமே இருக்கிறது. முன்னேற்றம் அடைவதற்காக கொள்கையை விட்டுச் சந்தர்ப்பம் அனுசரியாதிருக்கும் அவருடைய பண்பை பாராட்டாதிருக்க முடியுமா?

இந்த தொல்லை வாழ்க்கையின் அனுபவங்கள் தான் இளைஞரான அவரைப் பல நூறு கவிதைகளின், பல நாடகங்களின்: இரண்டு சிறந்த நாவல்களின், நூற்றுக்கு மேற்பட்ட சிறு கதைகளின் ஆசிரியராக மாற்றி வைத்திருக்கிறது. அவரின் தத்துவ நாடகம் ஒன்றும் சமீபத்தில் நடிக்கப்பட இருக்கிறது. தணலன் வீட்டு குப்பைக் காகிதங்கள் அனைத்தும் தத்துவக் குவியல்கள் என்றால் மிகையாகாது.

இத்தகைய சிந்தனையாளரை, தத்துவக்கவிஞரை நாம் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். வாழ்க தணலன்! உயர்க அவரது சிந்தனை!

ஃ ஃ ஃ

சிந்தனைக்கு மறுமலர்ச்சி ஏற்பட்டபின், கடவுளைப் பற்றி பல அறிஞர்கள், பல ஆராய்ச்சியாளர்கள், வெளியிட்டிருக்கிறார்கள். பல நூல்கள் வெளிவந்தன.

சூறாவளிபோல் கிளம்பிய இந்த ஆராய்ச்சிகளில் ஏற்பட்ட புதிய முடிபுகளுக்கு புதிய உருவம் கொடுத்திருக்கிறார் ஆசிரியர் இந்த நூலில்.

உலகம் பிறந்தது முதல், உயிர்கள் தோன்றி வளர்ச்சி அடைந்து இன்று நாம் காணும் இந்தக் காலம் வரை,

மனித நாகரீகத்தில் ஏற்பட்ட பலவித மாற்றங்களின் மறைவிலே பேராசையும், சுயநலமும் கொண்ட சிறிய கும்பலால் பெரிய மனிதசமுதாயம் எப்படிஏமாற்றப்பட்டு அறியாமைச் சிறையிலே விலங்கிட்டு வைக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை தெளிவாகத் துலக்கிக்காட்டுகிறது இந்நூல்.

"எது இருக்கிறதோ, அது இயற்கை என்றால், எது எவ்வாறு இருக்கிறதோ அது இயற்கை என்றால் அதற்கு வேறொரு அடிப்டை இருக்க வேண்டிய அவசியம் இல்லையல்லவா? என்ற அடிப்படையான வாதம் இயற்கையின் பெயரால் கடவுளைக்காட்டி வந்தவர்களுக்குச் சரியான சூடு ஆகும். மனிதனின் வளர்ச்சி ஏற்பட்ட விதத்திற்குப் பொருள்களின் மாறும் தன்மை மாற்றப்படும் தன்மையின் அடிப்படையில் செய்து காட்டும் வாதம் கற்பனை வாதத்தையும் தவிடுபொடியாக்கிவிடுகிறது. விஞ்ஞானத்தையும் கடவுளுக்குத் துணையாக இழுத்துக் கொள்ளக் கடைசியாகச் சிலர் செய்து வரும் முயற்சிக்கும் இந்த நூல் சரியான பதில் அளிக்கிறது.

பகுத்தறிவுப் பிரசுரங்களிலே முதன்மை வகித்தக்க இந்த நூல் பலருக்கும் உபயோகமாக இருக்கும் என நம்புகிறோம். வழக்கம்போல வாசகர்கள் ஆதரித்து மேலும் மேலும் இம்மாதிரி பகுத்தறிவுக் களஞ்சியங்களை வெளியிட ஊக்குவிக்க விரும்புகிறோம்.

-பதிப்பகத்தார்

★

# வெறும் கனவு

அன்ருடம் வாழ்க்கையிலே பட்ட அடிகள்...... நேற்றைய தழும்பில் புரையோடும் சீழ்...அதன் வேதனே; இன்று சுடச்சுடத்தலைமேல், முதுகின்மேல், கால்களில், கைகளில் எல்லாவற்றிற்கும் மேலாகச் சாதாரண மனிதன் நெஞ்சின்மேல்...விழுந்து கொண்டிருக்கும் அடிகள்...... அப்பப்பா...சகிக்க முடியவில்லை!

நித்தம் நித்தம் துன்பம். உழைத்தோம். பிழைக்க முடியவில்லை. பிழைத்தோம் அது சாவை விடவும் கேவல மானதாக இருக்கிறது. செத்தோம். நம்முடைய சாவும் சாகக்காத்துக்கொண்டிருக்கும் இன்னொரு மனிதனின் தலைமேல் சுமையாக விழுகிறது. இது நமது வாழ்க்கை.!

வெந்தஉயிர் வேதனையால் நொந்த உள்ளம்
கண்களிலே ஏக்கம், வாழ்வில்
எந்தநிலை ஏற்றதென எதிர்காலம்
யாதுவென அறியா இருளும்—

இன்றிருக்கும் உணவுமொரு குடிநிழலும்
இனியொருநாள் சென்ற பின்னும்
நின்றிருக்கும் எனும்நிலையும் இல்லாதே
நாள்தோறும் கவலை இன்னும்—

பெண்டுபிள்ளை மேலேஉயிர் கொண்டகாதல்
பிற்காலக் கவலை. அச்சம்
உண்டுகொலோ இவ்வழியில் இன்னுமோர்
இன்னல்களே அன்றி ஓர்நாள்

உண்டுஇருக் கின்ருேம்நாம் உழைத்திடுவோம்
உயிர்வாழ்வோம் என்னும் உறுதி
கண்டுநிதம் கவலையின்றிக் கண்ணீரிலாக்
காலம்வரும் நன்னுள் என்ருே?

என்று கவி ஒருவர் பாடியகதியில் இருக்கிறது இன்றைய மனிதனின் வாழ்க்கை.

இதிலே ஒரு மயக்கம். அற்பத்திலும் அற்பமாக அரை நாழிகைகூட நிலையாக நிற்காத சிறு மயக்கம்... அதிலே ஒரு கனவு. அந்தக்கனவில் பிறந்து கனவோடு மடியும் சின்னஞ்சிறிய நம்பிக்கை! இதற்காக மாத்திரமே இன்றைய பாமர மனிதனுக்கு...பல்லாயிரக்கணக்கான இருளில்வாழும் ஏழைகளான சாதாரண மனிதர்களுக்கு, பல கோடிகள் கணக்கான ரூபாய்கள் பொறுமான நிலங்களையும், பொருள்களையும், தங்கத்தையும், மணிகளையும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் கோயிற்கடவுள் உபயோகப்படுகிறார்.

ஆனால்...எத்தனை அழகான மயக்கம்...? எத்தனை அழகான கனவு...? அடடா எவ்வளவு அற்புதமான நம்பிக்கை.!

அபின் சாப்பிட்டவன் இந்திர லோகத்தில் கந்தர்வ கன்னிகளின் மார்பகத்தில் கொஞ்சும் குதலை மொழி கிளறும் அவர்களுடைய செவ்விதழ்களோடு இதழ்கலந்து இன்புற்றுக் கொண்டிருப்பதாக இன்பக்கனவுகள் காண்பதில்லையா? கஞ்சா அடித்துவிட்ட சாமியார்...“அப்பனே... மோட்சக்கதவுகள் திறந்து கொண்டிருக்கின்றன' பாரடா...'' என்று உபதேசம் செய்ய முன் வருவதில்லையா...? இதைப்போல்... “எல்லாம் அவன் செயல். பூர்வ ஜென்ம பாவங்களுக்கு பலன் அனுபவிக்கிறோம். வருங்காலத்தில் அவன் அனுகிரஹத்தால் எல்லாம் நல்லவைகளாக முடியும்... நமக்கு கஷ்டங்கள் நீங்கும்...'

என்ற இதுபோன்ற அர்த்தமற்ற அபத்தமான கணநேர மனச்சமாதனத்திற்காக மாத்திரமே இன்றைய கடவுள்... விண்தோயும் கோபுரங்களின் மத்தியிலே தங்கக் கலசங் களின் கீழ் வைரமும் பட்டும் இழைத்த ஆபரணங்களில், தங்க ஆயுதங்களோடு விளங்கும் தெய்வங்கள் உதவுகின் றன என்றால் அது மிகை அல்ல.

மனித உள்ளத்திலே நல்ல உணர்ச்சிகளை விதைப் பதற்கு மனிதவர்க்கம் நல்ல நெறியில் செல்ல மார்க்கமாக அமைவதற்குமாக உண்டாக்கப்பட்டதாகச் சொல்லப் படும் மதம், சூழ்ச்சிக்காரர்களுக்கு அடிமைப்பட்டு ஏற்றத்தாழ்வுகளையும் ஆண்டை அடிமை நிலையையும் அணைத்துக்காக்கும் முள்வேலியாக மாறி யாருக்கும் உத வாத ஏட்டுக் குப்பையாகவும் திண்ணைவேதாந்தமுமாகவே மாறிவிட்டது.

ஆனால்......!

இந்த எளிய உண்மையை ஒன்றும் தெரியாத, அறி வின் ஒளிபடாத பாமரனிடம் போய்ச்சொல்லிப் பாருங் கள். அவன் கண்களின் முன்னால் நாம் பன்றிகளினும் கேவலமான விலங்குகளாகத்தான் விளங்குவோம். இதைப்பெரும் பணக்காரர்களாகத்திரியும் முதலாளியிடம் போய்ச்சொல்லிப் பாருங்கள். யமகிங்கரர்களைவிடக் கொடிய துரோகிகளாகத்தான் அவன் நம்மை எண்ணு வான். மதத்தைக் காப்பவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பூசாரிகளிடமும், பார்ப்பனர்களிடமும் போய் இதைச்சொல்லிவிட்டாலோ... "அடபாபீ...எரியும் தீயில் தலையைவிட்டுக்கொண்டாயே..." என்று நம்மை எள்ளி ஏசுவதோடு அல்லாமல் இந்தப் பாவத்தை நாம் மேலும்

செய்துவிடாமல் இருப்பதற்காக அவர்களின் கற்பனையில் மாத்திரமே இருக்கும் சுவர்க்கம் அல்லது நரகத்திற்கே அனுப்பிவிடவும் முயற்சிசெய்ய ஆரம்பித்துவிடுவார்கள்.

இவர்களில், கேவலம் வயிறு பிழைப்பதற்காகவும் பிறரை ஏமாற்றித் தான்உயர்ந்தவன் என்று கூறிக்கொள்வதற்காகவும் பல்லாயிரக்கணக்கான மக்களின் அறியாமையின்மேல் அவர்களின் அடிமைத்தனத்தின்மேல் மாத்திரமே தங்கள் இன்ப வாழ்க்கையை நிறுவிக்கொண்டிருக்கும் பூசாரிப் பார்ப்பனக் கூட்டங்களைப்பற்றியோ, அல்லது பணக்காரப்பெருச்சாளிக்கூட்டங்களைப்பற்றியோ நாம் கவலைப்படவேண்டியதில்லை. அறிவு வெள்ளம் பெருகிப் பொங்கி நுரைத்துக் குமுறி அடர்த்து ஓடும் பொழுது அரைக்கணத்தில் அடித்துக்கொண்டு போகப்பட வேண்டியவர்களே அவர்கள்! புரட்சித் தீ வெடித்துச் சுழன்று பாய்ந்து பாய்ந்து எரியும்பொழுது பொசுங்கிக் கருகிச் சாம்பலாய்ப்பறந்து போகவேண்டியவர்களே அவர்கள்! ஆனல்...?

அவர்கள் சிலர். நாமோ...பலர். கோடானு கோடிப் பேர். பல கோடிப்பேர். நாம் விழித்தெழவேண்டும். நம்முடைய அண்டை வீட்டுத்தோழர்களான பாமரர்கள் அத்தனைபேரும், அல்லல்பட்டு அவதியுற்று அனுதினமும் அரைக்கணமும் விடாது ஆவிதேய, அழகிய உடல்தேயப் பாடுபட்டுப்பிழைக்க முடியாத வறுமைப் படுகுழியிலே புதைந்துகிடக்கும் உழைப்பாளிகள், விவசாயிகள் அத்தனை அத்தனை பேரும் விழித்தெழவேண்டும். அதுதான் நமது கவலை...!

எல்லா மக்களும் உண்மையை உணர வேண்டும் அறிவுச்சுடர் எல்லா அகங்களிலும் அழகிய ஒளிவிட்டு ஆர்ப்பரித்து நிற்கவேண்டும். உண்மைக்கு மாறான எல்லாம் ஒன்றாக ஒடுக்கப்பட்டு ஒழிக்கப்படவேண்டும். அதுதான் நமது கவலை...!

ஒருவன் தன்னைத்தான் உயர்ந்தவன் என்று சொல்லிக்கொள்ள அதற்கு ஆமாம் போட்டு அவனைக்கண்டு அஞ்சி நடுங்க இன்னொருவன் இல்லாதிருக்கவேண்டும். அதுதான் நமது கவலை...!

தனி ஒருவன் தரணியெலாம் எனதுடைமை என்று சொல்லித்தருக்கி நிற்கத் தனி ஒருவனும் துயர்பட்டு உண்ணுதற்கும் உடுப்பதற்கும் இல்லாமல் ஒடுங்கி நிற்க இல்லாமல் இருக்கவேண்டும் அதுதான் நமது கவலை!

வேறொருவனைவிடத் தான் உயர்ந்தவன் என்று சொல்பவனின் நாக்கை அறுத்தெறியத்துடித்தெழுபவர் நூற்றுக்கணக்கான நம்மவர் இருப்பதை நாம் பார்த்து மகிழவேண்டும். அதுதான் நமது கவலை.

இன்னொருவனுக்கு இல்லாதவை எனக்கிருப்பதில் நியாயம் இருக்கிறது என்று சொல்பவனின் நெஞ்சத்தை நஞ்சிலிட்டுத்தீய்ப்போம் என்று சொல்பவர்கள் ஆயிரக் கணக்கில் நம்மவர்கள் இருக்கவேண்டும். அதுவே நமது கவலை.

வெறும் கனவு வேண்டாம். வீண் மயக்கம் வேண்டாம். உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள் என்று சொல்வதற்குத்தான் இது முதற்படி. இந்த நூல் கடவுளின் வழிமுறை குலம் கோத்திரங்களைத் தெள்ளத் தெளிய விளக்குகிறது. ★

# உலகம் பிறந்தது !

நாம் கற்பனை செய்யவில்லை. பழங்காலத்தைப்பற்றிப் பயனற்ற கனவுகள் காணவில்லை. எரிந்தும் அழிந்தும் போனவைபோக எஞ்சி நிற்கும் ஏட்டுச் சுவடிகளுக்குக் கண் காது மூக்கு வைத்துத்திரித்துக்கூறவில்லை. ஏதோ... எழுத்தை, எண்ணத்தைக் கதையாக்கவும் முன்வரவில்லை.

உண்மை இது! சரித்திரம் இது! மனித வளர்ச்சி இது! விஞ்ஞான ரீதியாகவும் தர்க்கத்திற்குப் பொருந்தவும் அறிஞர்கள் ஆய்ந்து உணர்ந்து அறிவித்த உண்மைகளை வகைப்படுத்தி, அதிலிருந்து அறிவின் உழைப்பால் அந்தக் காலத்தில் ஆண்டவன் எவ்வாறு உணரப்பட்டிருப்பான் என்பதை உள்ளவாறு உரைக்கும் முயற்சி இது.

இன்றைய காலம் இருக்கும் நிலைமையை, போலி வேதாந்தத்திரைகளைப்பறித்துவிட்டு, வெளிவேஷத்தையும் பகட்டையும் மினுக்கையும் களைந்துவிட்டு, வஞ்சகமாக நெஞ்சில் ஒன்று வைத்து வாயால் மாத்திரம் புகலப்படும் ஆசாரங்கள் ஒழுக்கங்கள் என்பனவற்றின் போலித்தன்மையை, சமூகக்கட்டுப்பாடு என்று கூச்சல் போடுபவர்களின் உளறல்களின் அபத்தத்தன்மையை அளவிட்டு அறிந்து உள்ளதைஉள்ளவாறு, பச்சையாக, நிர்வாணமாக அறிவின் ஒளிகொண்டு நாம் கண்டுவிட்டோம். உள்ளதை உணர்ந்து கொண்ட நமது திறமைக்கு அத்தாட்சியே இன்றையப் பகுத்தறிவுப் புரட்சிகள் போராட்டங்கள் யாவும்.

இந்தக் காலத்தைக் காணுகின்ற நாம், இந்தக்கால வளர்ச்சியை ஆண்டு ஆண்டாக, காலம் காலமாக இன்றைய நிலைமைக்குக்கொண்டுவந்த சென்ற காலத்தையும் பார்த்து அளவிட்டுவிட்டோம். எதிர்காலம் இப்படி இருக்க

வேண்டும் என்று நாம் கூறுகின்றோம் என்றால், அதன் அடிப்படை, காலவளர்ச்சியை நாம் உணர்ந்துகொண்டோம் என்பதேயாகும். எதிர்கால சமூகம் தனி ஒருவனின் மனித உரிமையையும் பறிக்காததாகவும் ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையைப் பரிபூரணமாக அனுபவிப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கத்தக்கதாகவும் இருக்கவேண்டும் என்று நாம் கூறுகின்றோம் என்றால், அதன் அடிப்படை, சென்றகாலத்தின் பயங்கரங்களையும் பலஹீனங்களையும் இந்தக்காலத்தின் கேலிக்கிடமான போலிக் கோபத்தையும் நாம் பச்சையாக உணர்ந்துகொண்டோம் என்பதே ஆகும்.

உண்மையற்றது உண்மை ஆக்கப்பட்டது எப்படி...? மனிதனின் மடமையின் மேல்?

அப்படியானால் ஆரம்ப மனிதன் மடையனாக இருந்தானா, அல்லது அப்படி ஆக்கப்பட்டானா என்பது கேள்வி?

இதற்குப் பதில் கூறும் முன் மனிதனின் வளர்ச்சியைப்பற்றி அறியவேண்டியது அத்யாவசியமாகிறது.

விஞ்ஞானம் சொல்கிறது.

எண்ணற்ற உடுக்களும் கோளங்களும் தங்களுக்குள்ளே புதைந்துகிடக்கும் இழுப்புச் சக்தியால் தமக்குத் தாமே உருண்டுகொண்டும் தம்மைப்பிணைத்திருக்கும் ஒரு மையத்தைச் சுற்றிச் சுழன்றுகொண்டும் இருக்கின்றன. இருக்கின்றன, சுழல்கின்றன, சிறிது இடம் மாறுகின்றன என்ற அளவில் மாத்திரமே இருக்கும் உடுக்களைவிட்டு விட்டால், நம் அண்மையில் இருக்கும் சூரியனைப்பற்றிய எல்லா விவரங்களும் அறியப்பட்டிருக்கின்றன.

அந்த சூரியனிலிருந்து எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தெரித்த ஒரு துளி எரியும் குழம்பு குளிர்ந்து இந்த பூமியாயிற்று. பூமி சூரியனில் பத்து லட்சத்தில் ஒரு மடங்குதான் என்றால் பூமி சூரியனில் ஒரு துளிதான் என்பதை நாம் எளிதாக அறிந்து கொள்ளலாம்.

ஆரம்பத்தில் இந்த பூமியின்மேல் எந்த விதமான உயிர்களும் இருந்திருக்க முடியாது. பூமி குளிர்ந்தது. குளிர்ந்த இடங்களுக்கும் குளிராத அல்லது குறைவாகக் குளிர்ந்திருந்த இடங்களுக்கும் ஏற்பட்ட இயற்கைப் புரட்சியில் பல பிரளயங்கள், பல மாற்றங்கள் உண்டாகியிருக்கவேண்டும். இயற்கையின் இந்த மாறுபாடுகளிலிருந்து காற்றும், பனிப் பாறைகளும், பனியும் நீரும் உண்டாயின. பூமி கடலாகவும் மலையாகவும், நிலமாகவும் நீராகவும் பகுதிகளாகப் பிரிந்தது.

இயற்கையின் மாற்றங்களில் ஏற்பட்ட விஞ்ஞானக் கலவைகளில் பூஞ்சுகளும், பாசங்களும், புற்பூண்டுகளும் உண்டாயின. புதர்களும், செடிகளும் கொடிகளும் மரங்களும் தோன்றின. இவற்றிற்கிடையிலே, எலும்போ, நரம்போ, உருவமோ, அமைப்போ ஒன்றுமே இல்லாத உயிர்ப் பிராணிகள் தோன்றின.

சில கடற்கரைகளிலே இத்தகைய பிராணிகள் உலவுவதும் அவை வளர்வதும் இரண்டாகப் பிரிந்து இரண்டு பிராணிகள் ஆவதும் இவ்வாறே இவற்றின் இனம் வளர்ந்துகொண்டு போவதும் விஞ்ஞானம் நமக்குப் போதிக்கும் உண்மைகள்.

தாவர வளர்ச்சியும் இந்த உயிர்ப் பிராணிகளின் வளர்ச்சியும் ஒன்றை அடுத்து ஒன்றே நிகழ்ந்து வந்திருக்கின்றன. பெரு மரங்களும் காடுகளும் உண்டாகியதை அடுத்தே பெரும் விலங்குகளும் தோன்றி யிருக்க வேண்டும்.

ஒன்றிலிருந்து ஒன்று, ஒன்றை அழித்து ஒன்றே தாவரங்களும், பிராணிகளின் வகைகளும் பிறந்தன என்று கூறினாலும் அதிலிருந்து புதிதாக ஒன்று தோன்றுவதற்காக பழயது முழுவதுமே அழிந்துவிட்டது என்று கொள்ளவேண்டியதில்லை. ஏன் என்றால் இன்றைய உலகத்திலே நாம் எண்ணற்ற உயிர்களைப் பார்க்கிறோம். இவற்றிலிருந்து இவை உண்டாகி யிருக்கவேண்டும் என்றும் உணர்கிறோம். ஆனால் இரண்டும் உலகில் இருக்கின்றன. இது எப்படி?

சிறு மீன் பெரு மீனாகியது. ஆனால் சிறு மீன் இனம் அழிந்துவிடவில்லை. இவற்றை விரிவாக எழுதிக் கொண்டு போக வேண்டுமானால் எடுத்துக்கொண்ட பொருளைப் பற்றி ஆராய்வதற்குத் தனியாக வேறு நூல்தான் எழுதவேண்டியதாக இருக்கும். ஒரு உதாரணம் மாத்திரம் கூறிவிட்டு இதனை முடித்துக் கொள்வோம்.

இன்றைய இயற்கைத் தாவரம், பிராணிகள் ஆகியவற்றைப் பற்றிய பெரும் ஆராய்ச்சிக் கழகங்களிலே பழய தாவரங்களை வைத்துக்கொண்டு அவற்றின் கருவூலத்திலிருந்தே சில விஞ்ஞானப்பிரயோகங்களின் மூலம் தாவர வர்க்கங்களை உண்டுபண்ண முடியும் என்று நிரூபித்துக் காட்டி இருக்கின்றனர்.

நாட்டு எருமைகளையும் மாடுகளையும் நாம் பார்க்கிறோம். அதே சமயத்தில் காலேஜ் எருமைகள், காலேஜ் மாடுகள் என்ற வர்க்கங்கள் புதிதாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் கேள்விப்பட்டிருப்போம் பார்த்தும் இருப்போம். நாட்டு எருமைகளிலிருந்தே காலேஜ் எருமைகள் உற்பத்திசெய்யப்பட்டன. என்றாலும் இரண்டு இனங்களும் அழிந்துபோகவில்லை. இதைப் போலவேதான், இயற்கையின் விஞ்ஞான அமைப்புக்கும், அந்த விஞ்ஞான அமைப்பில் வாழக்கூடிய தன்மைக்கும் ஏற்ப பலவிதப்பிராணிகள் உலகத்தில் உண்டாயின.

பிராணிகளின் வளர்ச்சியின் முதிர்ச்சிதான் மனிதன், என்பது ஆராய்ந்து அறிந்த அறிஞர்களால் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறாக உலகமும் அதன் மேல் உள்ள உயிர்க்குலத்தின் இன்றைக்கிருக்கும் இத்தனை வகைகளும் தோன்றின.

# விலங்கில் விலங்கு

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே... எத்தனையோ விதமான பிராணிகள், தாவரங்கள் முதலியன தோன்றிய பின்னர், உடல் அமைப்பிலும் மன அமைப்பிலும் எத்தனையோ வித மாற்றங்கள் அடைந்து முதல் மனிதன் தோன்றினான். அவன் தனி ஒருவனாகத்தோன்றி இருக்க மாட்டான். ஒரு கும்பலாகத்தான் மனிதர்கள் தோன்றி இருப்பார்கள். மனிதனின் இந்த வளர்ச்சி, அரைகுறையாக மனித உருவம் அடைந்து அதிலிருந்து மெல்ல மெல்லப் பூரண வளர்ச்சி அடைந்திருக்கவே வேண்டும்.

இதுவரை செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சியிலிருந்து மனிதர்கள் முதல் முதலாக இந்த இடத்தில்தான் தோன்றி இருப்பார்கள் என்று நிச்சயமாகக் கூறமுடியாது ஆனால் கிடைத்திருக்கும் ஆராய்ச்சிகளிலிருந்து இன்று இருக்கும் இந்தியாவும் ஆப்ரிக்காவும் இந்துமகா சமுத்திரம் இருக்கும் பிரதேசங்களும் சேர்ந்த 'இலெமூரியா' கண்டத்தில் தான் முதல் மனிதன் தோன்றியிருக்கவேண்டும் என்று நம்பவேண்டியிருக்கிறது. ஐரோப்பா இங்கிலாந்து ஆகிய இடங்களைச்சார்ந்துள்ள இடங்களிலும் இதற்குச் சமகாலத்தில் அல்லது சற்றுப் பின்னதாக மனிதன் தோன்றி இருக்கவேண்டும்.

இயற்கைகளில் ஏற்பட்ட தட்பவெப்ப நிலைகளுக்கும் விஞ்ஞான மாற்றங்களுக்கும் ஏற்ப மனிதன் தோன்றினான் என்பதற்குச் சான்றாக இன்றளவும் மனிதர்கள் அவரவர்கள் இருக்கும் இடத்தில் நிலைமைக்குத்தகுந்தமாதிரிப் பழக்கவழக்கங்கள் மாத்திரமே அல்லாமல் உடல் அமைப்பும் உள்ளவர்களாக இருப்பதையே கூறலாம். பத்துப்

பதினைந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக இந்த மண் உலகத்தின்மேல் மனிதப்பயிர் முளைத்தது. முதல் மனிதன் தோன்றினன்.

அந்த முதல் மனிதன் எப்படி வாழ்ந்திருப்பான் என்பதை எண்ணிப்பார்ப்போம். கற்பனைசெய்வது அல்ல. பழம் மனிதர்களின் வாழ்க்கை நிலையையும் பழக்க வழக்கங்களையும் அறிஞர்கள் ஆராய்ந்து அறிந்து கூறியதே ஆகும். தவிர இன்றைக்கும், அறிவு ஆராய்ச்சிகளின் ஒளி பரவாத இருளிலே, மலைகளிலும் காடுகளிலும் வசித்து வரும் மனிதர்கள் இதற்குச் சான்றாக விளங்குவதைக் காணலாம். நம் நாட்டில் மாத்திரமே அல்லாமல் ஆப்ரிக்கா அமெரிக்கா கண்டங்களின் பூர்வ குடிகளும் மலேயா கிழக்கிந்தியத் தீவுகள் முதலியவற்றில் வசிக்கும் பூர்வீகக் குடிகளும் வாழும் நிலையை வகுத்து உணர்ந்தாலும் இவற்றிலிருந்து மண்ணுலகில் தோன்றிய முதல் மனிதன் எப்படி வாழ்ந்திருக்கக்கூடும் என்பதை யாரும் எளிதில் யோசித்து அறியக்கூடும்.

உடல் ரோமமே போர்வையாக, உடைகளோ, அணிகளோ ஏதும் இல்லாமல் காட்டு விலங்குகளைப்போல் அங்கும் இங்கும் திரிந்துகொண்டிருந்திருப்பான் அந்த முதல் மனிதன். மரப் பொந்துகள், குகைகள், மலை இடுக்குகள் ஆகியவைகளே அவனுடைய மாடமாளிகைகள், பசி, தாகம், உடலில் ஊறுகின்ற பால் உணர்ச்சி இவைதான் அவனுடைய நித்திய உணர்ச்சிகள்.

ஆணும் பெண்ணும் கூடிவாழவேண்டும் என்னும் உணர்ச்சி அதன் அடிப்படையாகப் பிறந்த குடும்ப உணர்ச்சி அவன் உண்டாகிய அன்றே உண்டாயிருக்க

வேண்டும். ஆனால் அந்தக் குடும்பவாழ்க்கையில் இன்று பெருகியிருக்கும் அளவிற்கு அன்புணர்ச்சி தன்னல மறுப்பு போன்றவைகள் இருக்குமா? என்பது சந்தேகம். ஏதோ தேவைகளுக்காக, இச்சைகளின் அடிப்படையில் மாத்திரமே அவனுடைய குடும்ப வாழ்க்கை அமைந்திருக்கும். அன்பும் தன்னல மறுப்பும் இந்தக் குடும்பங்களில் அளவுகடந்து இருந்திருக்கக்கூடும் என்பதும் உண்மையாக இருந்தாலும் அந்தக்கால மனிதர்களின் வாழ்க்கை இன்றைய மனிதனின் வாழ்க்கையைவிட வெறியும், ஆத்திரமும், போராட்டமுமே அதிகம் கலந்ததாக இருந்திருக்கும் என்பதை உறுதியாக நம்பலாம்.

அந்த மனிதன் பசித்தபோது கையில் அகப்பட்ட காய், கறி, கிழங்கு, பறவை, மிருகம் முதலிய எதுவாயினும் அது தின்னக்கூடியதாக மாத்திரம் இருந்திருந்தால் அப்படியே பிடித்துத்தின்றிருப்பான். தாகம் வந்த பொழுது தண்ணீர் இருக்குமிடத்தைத் தேடிச்சென்றிருப்பான். உடல் துடித்தபொழுது அருகில் இருக்கும் பெண்ணை நாடியிருப்பான். இவர்களுக்கிடையே குடும்ப வாழ்கை ஏற்படக்கூடச் சிறிதுகாலம் பிடித்திருக்கும்.

அவனுக்குப் பேசத்தெரியாது. பாடத்தெரியாது. கல்வி இன்னதென்று கண்டிருக்கமாட்டான். கலை உணர்ச்சியைப் பற்றிக் கனவு கண்டிருப்பானு என்பதே சந்தேகம. அவனும் ஒரு விலங்காக முழு விலங்காக மாத்திரமே இருந்திருப்பான் என்பதில் சந்தேகம் இல்லை.

கட்டற்ற கவலை அற்ற வாழ்க்கை. அறிவு இன்னது என்று அறியாத வாழ்க்கை. ஆயினும் அச்சமற்ற ஆண்மை நிறைந்த வீரவிடுதலை வாழ்க்கை. அவன் யாருக்

கும் தலைபணிந்திருக்கமாட்டான். யாரைக்கண்டும் அஞ்சி வணங்கி இருக்கமாட்டான். தன்னைப்போன்ற வேறொரு மனிதனை உயர்ந்தவன் என்று ஒப்புக்கொண்டிருக்கவே மாட்டான்.

இவன் முதல் மனிதன். நமது மூதாதை. நம்முடைய இன்றைய மனித வர்க்கத்திற்கு முதல் வித்து. ஆனால் அவனுடைய வாழ்க்கை வெறும் விலங்கின் வாழ்க்கையாகவே இருந்தது.


படித்துப்பாருங்கள்:

சுவையான ரஷ்யக் காதற் கதை

# அன்று இரவில்

தமிழாக்கம்: அசோகன்

- அழகான பதிப்பு
- அருமையான கதை

88 பக்கங்கள். விலை ரூ. 1.

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் உண்டு.

விலாசங்களுக்கு

**எம். சூரி,**

14 A குப்பய்யர் தெரு, மின்ட் பில்டிங்ஸ் P. O.

ஜி. டி. மதராஸ்.

# இயற்கையும் மனிதனும்

மூடனாகவும் முட்டாளாகவும் தோன்றிய முதல் மனிதன் மெல்ல மெல்ல வளர்ச்சி அடையத் தொடங்கினான். அவனுடைய வளர்ச்சி அதிசயமானது. அற்புதமானது நல்ல ஒரு நாயைச் சொன்ன வேலைகளைச் செய்ய நாம் பழக்கிவிடுகிறோம் அல்லவா...அதைப்போல் மனிதனை இன்றைய மனிதனுடைய நிலைக்குப் பழக்கிக்கொண்டு வர இயற்கை அரும்பாடுபட்டிருக்கிறது! இங்குதான் அடிப்படைத் தவறு ஏற்படுகிறது. கவனிக்கவேண்டியது, இன்று மனிதன் இயற்கையையே அடிமை கொள்ளும் அளவிற்குப் பழக்கப்பட்டிருக்கிறான் என்பது தான்.

மனிதனை இயற்கை பழக்கிற்று என்று சொல்வதற்கும் மனிதன் இயற்கையிடமிருந்து பழகிக்கொண்டான் என்பதற்கும் பெரிய மாறுபாடு இருக்கிறது. இந்த மாறுபாட்டின் அளவுதான் கடவுள் மனிதனைப் படைத்தார் என்பதற்கும் கடவுளை மனிதன் படைத்தான் என்பதற்கும் உள்ள மாறுபாட்டின் அளவு ஆகும். இந்தச் சிறிய தத்துவத்தைச் சொல்லும் முறையிலிருந்துதான் நாம் உலக வளர்ச்சியின் உண்மை நிலையை எடுத்துக்காட்டுவதற்கு முயலும் தன்மை எந்த அடிப்படையிலிருந்து காணப்படுகிறது என்பதும் பெறப்படும். இது உன்னித்துக் காண்பவர்களுக்கே தோன்றுவதாகும்.

மனிதனை இயற்கை பழக்கிற்று...? இல்லை... இயற்கை பேசவும் பாடவும் உணர்த்தவும் சக்தியற்ற உயிரற்ற பொருள்களிலே பரவிக்கிடக்கிறது. உயிர்ப்பிராணிகளின் இடத்தில்தான் இயற்கை உயிர்பெறுகிறது. உயிர் அற்றவைகளிடத்தில் அதுவும் உயிர் அற்றதாகவே இருக்கிறது. அதாவது, இயற்கை என்பது என்ன? எது

இருக்கிறதோ அது தான்...? அது கல்லும் மண்ணும் ஆனாலும் சரி... கனவு, கற்பனைகள் ஆகிய உயிர்த் துடிப்புகள் ஆனாலும் சரி எது எப்படி இருக்கிறதோ அப்படியே இருக்கும் அதுதான் இயற்கை.

ஆனால் இயற்கை பாடுவதாகவும் பேசுவதாகவும் அசரீதக்குரல் எடுத்து மனித இதயத்தோடு இதயம் வைத்துப் பேசுவதாகவும் கவிஞர்களும், அறிஞர்களும் கூறுகிறார்களே என்றால், கவிஞர்களும் அறிஞர்களும் தாங்கள் அடைந்துள்ள உள்ளப் பண்பால் இயற்கை பேசுவதாக எண்ணி உணர்ந்தார்களே அல்லாமல் இவர்களுடைய கற்பனையும் அறிவும் அந்த இயற்கையின் உருவத்தில் பொருந்தி பாடும், பேசும் தோற்றம் அளித்ததே அன்றி உண்மையில் இயற்கை பேசவும் இல்லை, பாடவும் இல்லை.

மனிதனின் கனவு காணும் தன்மையும் கற்பனை செய்யும் தன்மையும் அவனுக்கு அளவுகடந்த நன்மைகள் செய்திருக்கின்றன. அவனுடைய அறிவு வளரவும் கலை உணர்ச்சிகள் பரவவும் அவை எவ்வளவோ உதவி செய்திருக்கின்றன. ஆனால் மனிதனுடைய இன்றைய மூட நம்பிக்கைகளுக்கும், அர்த்தமற்ற பழக்கங்களுக்கும் இந்தக்கனவு காணும், கற்பனை செய்யும் தன்மைகளே ஆதாரமாயிருக்கின்றன என்பதுதான் விசனிக்கத்தக்கது.

சுருங்கச் சொன்னால், மனிதனின் கற்பனைசெய்யும் திறமையே, மனிதனிடத்தில் புதைந்துகிடக்கும் கனவு காணும் தன்மையே அவனை இன்றைய மனிதனாக வளர்த்தன. அவனிடம் இருக்கும் தீமைகளுக்கும், மனித சமுதாயத்திற்கே, சமுதாயம் என்கிற மரத்தின் வேரையேபற்றி

R30
X142



அழுகிக் கெட்டுப்போகச் செய்துகொண்டிருக்கும் தீய நம்பிக்கைகளுக்கும் எண்ணங்களுக்கும் அதுவே தான் ஆதாரமாகவும் அமைந்திருக்கிறது.

இயற்கையினிடமிருந்து மனிதன் எவ்வாறு பழகிக்கொண்டான்?

மனிதன் இயற்கையினிடமிருந்து தன்னுடைய உருவத்தைப் பெற எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் ஆயின. ஒன்றிலிருந்து ஒன்றாக மாறும் தன்மை, வளரும் தன்மை உலகத்தில் உள்ள ஒவ்வொரு அணுவிலும் புதைந்து கிடக்கிறது. பால் தயிர் ஆகிறது. தயிரில் வெண்ணெய் கிடைக்கிறது. வெண்ணெயை நெய்யாகவும் மாற்ற முடியும். இவற்றிற்கெல்லாம் இயற்கையின் சிறு உதவியே தேவை... இதைப்போல் நம் அறிவுக்கெட்டுகிற மாற்றங்கள் எத்தனையோ அன்றாடம் காண்கிறோம். இதைப்போல் உயிர்ப்பிராணிகளுக்கிடையே எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக ஏற்பட்ட மாற்றங்களுக்குப் பின்னால் மனிதன் தன் உருவத்தை அடைந்தான். பிராணி நூல் வல்லார் மனிதனின் உருவ அமைப்பில் கூட ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் இருந்த மனிதர்களுக்கும் இன்றைய மனிதர்களுக்கும் மாற்றங்கள் இருப்பதாகக் கூறுகின்றனர்.

அந்த மனிதர்களின் உருவமும், இடத்திற்கு இடம், இருக்கும் இடத்தின் இயற்கை அமைப்பிற்கும், தட்ப வெப்ப நிலைமைக்கும் பொருந்தியவாறு மாறுபட்டிருப்பது கண்கூடு. குளிர்ந்த ஐரோப்பாவில் வாழும் மனிதர் கண்ணிற்கு இனிய வெண்மை நிறத்துடன் மெல்லிய சருமத்துடன் இருக்கின்றனர். வெயில் கொளுத்தும் ஆப்ரிக்கக் காடுகளிலே கரிய தடித்த சர்மம் உடைய நீக்ரோக்களே

காணப்படுகின்றனர். ஜப்பானியன் மஞ்சள் நிறமாய்க் குள்ளமாய் இருக்கின்றான். எஸ்கிமோ மனிதன் குட்டையான கட்டையான உருவம் உடையவனாயிருக்கின்றான். மனிதனின் உடல் அமைப்புமாத்திரம் அல்ல அவனுடைய அழகும் நிறமும் குணமும் கூட இயற்கை அமைப்புக்குத் தக்கவாறே இருக்கின்றன. மனித இயல்பு, குணம், பழகும் தன்மை, நடவடிக்கைகள் மொழி ஆகிய யாவும் மனிதனுடைய சுற்றுச்சார்புகளுக்கும் இயற்கை சூழ்நிலைக்கும் தக்கவாறே இருக்கின்றன என்பதுவும் காணலாம்.

குளிர்ந்த ஐரோப்பா, பிரிட்டிஷ் தீவுகளில் வசிப்பவர்களின் மொழிகள் யாவும் வாயை அதிகம் திறவாமலேயே பேசத்தகுதி உடையனவாகவும் வெப்பம் மிகுந்த நாடுகளில் உள்ளவர்கள் பேசும் மொழிகள் வாயை அகலத் திறந்து பேசவேண்டியனவாகவும் இருக்கின்றனஎன்பதை மொழி நூல் ஆராய்ச்சி வல்லார் ஒப்புக்கொள்வர். இதே போல் அடிப்படையான பழக்க வழக்கங்களிலும் கட்டுக்கோப்புகள் இருக்கின்றன. சோம்பேறியான சீனனுடைய எழுத்து சித்திரம் போலவும் சுறுசுறுப்பு நிறைந்த ஆங்கிலேயனுடைய எழுத்து எளிதில் கோடு கிழிப்பது போல் எழுதத்தக்கதாய் இருப்பதுவும் கூடக் கவனிக்கத்தக்கன.

இருக்கட்டும்.

பூர்த்தியான அந்த முதல் மனிதன் அதிகமான உடல் வலிமையும் மிக்க குறைவான யோசிக்கும் திறனும் உடையவனாகவே இருந்திருப்பான். ஏன்? அப்படி இல்லாவிட்டால் அவனால் பிழைத்திருக்க முடிந்திருக்காது. அவனுடைய சூழ்நிலை அப்படி இருந்தது. அவன் அப்படி இருந்ததாகத்தான் சரித்திரம் கூறுகிறது.

இன்றைக்கு உலகத்தில் இருக்கின்ற விலங்குகளைக் காட்டிலும் மிகப் பெரியனவும் மிக வலிமைப்படைத் தனவும் ஆகிய விலங்குகள், பறவைகளுக்கிடையே அவன் வாழவேண்டி இருந்தது. தன் உயிரைக் காப் பாற்றி வைத்துக்கொள்வதற்காகவே அவன் பெரிதும் போராடவேண்டி இருந்தது. அவனுக்கு நகங்கள் பற் களைவிட வேறு எந்த ஆயுதத்தின் உதவியும் இருக்கவில்லை. அதிகமாகப் போனால் கற்கள் தான். ஒளிந்து மறைந்து கொள்ள ஆபத்தில்லாத இடம் என்று ஒன்றுமே அவன் அறிந்திருக்கவில்லை. எந்த இடத்தில் எந்த நிலையில் எப் படி வேண்டுமானாலும் ஆபத்து முளைக்கக்கூடும் என்ற சூழ் நிலையிலேயே அவன் வாழவேண்டியதாக இருந்தது. பருவ மாற்றங்களை அவன் எதிர்த்து நிற்கவும் வேண்டி இருந் தது.

இந்தத் துயரங்களுக்கும் தொல்லைகளுக்கும் இடையே தான் அவன் வளர்ச்சி அடைந்தான். இயற்கை யின் இந்தத் துயரங்களும் தொல்லைகளும் தான் அவனை வளர்த்தன என்று சொன்னல் அது அடிப்படையான ஒரு தவறு ஆகும். அப்படியானல் ஏன் விலங்குகள் முதலா னவை இந்த வளர்ச்சியை ஆராயவில்லை? பூர்த்தியான அந்த மனிதனுக்கு தீமைகளும் தொல்லைகளும் தோன்றியபோது அவற்றைத் தடுத்துக்கொள்ளவேண்டும் அவற்றிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்னும் உணர்ச்சி இருந் தது. அந்த உணர்ச்சியின் தூண்டுதலில் இன்ன தீமையை இந்த விதமாய் ஒழித்துக்கொள்ளலாம் என்று உணரும் தன்மையும் அவனுக்கு இருந்தது. அதனல் தான் அவன் அதைச்செய்தான் அந்த வளர்ச்சியை அடைந்தான். வள

ரும் தன்மை என்பது இயற்கையின் வித்தே தவிர இயற்கையின் செயல் அல்ல.

இந்த தத்துவத்தின் அடிப்படையை ஒரு உதாரணத்தின் மூலம் நன்கு விளக்கவேண்டும் என்று கருதுகிறேன். ஒரு செடியின் விதை. அது இயற்கையின் சொத்து, ஒரு வித்து. அது மண்ணில் நட்டால் வளர்கிறது. இந்த வித்தைச் செடியாக வளர்த்தது இயற்கையா என்றால் அல்ல என்பதே தான் விடை. அந்த வித்திடம் இருக்கும் பூரண நிலையை, வளரும் தன்மையை அளித்தது இயற்கை. ஆனால் வளர்த்தது விதையே தவிர அது வளர்க்கப்படவில்லை. விதை தன்னிடம் இருக்கும் பூரண நிலைமையால் ஊறிற்று. மண்ணின் சாரத்தை உறிஞ்சிற்று. முளையாக வளர்ந்தது. செடியாக மலர்ந்தது. மறுபடியும் நட்ட விதைகளுக்குச் சமமான பூரண விதைகள் பலவற்றை உண்டாக்கும் திறனும் பெற்றது. இந்தத்திறமையை இயற்கை அந்த வித்துக்கு அளித்திருந்ததே தவிர அது வித்தை வளர்க்கவில்லை.

இதைப்போல் தான் மனிதனும் அவன்தான் வளர்ந்தானே தவிர இயற்கையோ, கடவுளோ அவனை வளர்க்கவில்லை. இப்பொழுது இந்தத் தத்துவம் அனைவருக்கும் புரிந்துவிடும் என்று நம்புகிறேன்.

தனிப்புல் மேய்வதில் பயன் இல்லை. இதை ஆழ்ந்து நோக்க வேண்டும். திரும்பத்திரும்ப எண்ணிப்பார்க்க வேண்டும். உலகத்தில் எதையுமே இன்னொன்று தானே தனியாக உண்டாக்கிவிடவில்லை. அது அந்த இடத்தில் அதாக மாறிற்று, விந்து கருப்பையில் குழந்தையாக உருப்பெறுவதைப்போல. பால்...தயிராக மாறுகிறது. இதை

எதுவும் செய்யவில்லை. பாலில் விழுந்த மோர்த் துளிகள் பாலைத்தயிராக்கிற்று என்று சொல்கிறோம் என்றால் அந்தச் செயல் பாலிடம் மோர்த் துளிகளை ஏற்றுக்கொண்டு தயிர் ஆகும் தன்மை இருந்ததால் நடந்ததே தவிர...அதன் பங்கு மோர்த்துளிகளை மாத்திரமே சார்ந்ததல்ல. மோர்த் துளி களுக்குள் புகுந்துகொண்டு கடவுளும் செய்யவில்லை.

இன்னும் ஒன்று,

யானையை மனிதன் பழக்குகிறான். இதை யானை மனிதனிடமிருந்து பழகிக்கொண்டது என்று சொல்லக் கூடாதா என்றால் கூடாதுதான். ஏன்?

யானையை மனிதன் அடிமைப்படுத்திவிட்டான். யானை தன் சுயதன்மைகளை இழந்து மனிதனின் ஏவலில் அடங்கு வதாகிவிட்டது. அதனால் யானை பழகிக்கொண்டது என் பது அதனுடைய பழகும் தன்மையைப் பெருமைப்படுத் திக்காட்டுவதாக இருந்தாலும் அந்த வார்த்தைகள், யானை பழகிக்கொண்டது என்பது யானையின் எசமானத்தன் மையைக் குறிக்கிறதே தவிர மனிதனின் மேன்மைத் தன் மையை மறக்கச் செய்கிறது. இதைப்போல் இயற்கை மனிதனைப்பழக்கிற்று என்பதுவும் இயற்கையைத்தான் மேலானதாகக் குறிப்பிடுகிறது. ஆனால் மனிதனோ, யானையை அடிமை கொள்வதைப்போல் இயற்கையையும் அடிமையாக்கிக்கொண்டுவிட்டான்.

இதுவரை நாம் ஆராய்ந்தவற்றில் மேற்காண வேண் டிய முடிபுகள் இவைதாம்.

வித்தின் வளரும் தன்மையும் மண், காற்று, கதிர் மழை முதலியவற்றில் புதைந்துகிடந்த வளர்க்கும் தன்மை யும் செடி ஆயிற்று.

பாலின் மாறும் தன்மையும் மோரின் மாற்றும் தன்மையும் சேர்ந்து தயிர் ஆகும் மாற்றம் உண்டாயிற்று.

யானையின் பழகும் தன்மையும் மனிதனின் பழக்கும் தன்மையுமே யானையின் பழக்கத்தை உண்டாக்கின.

அதைப்போல், இயற்கையில் மறைந்து கிடந்த இன்னல்களின் தூண்டுதலால் மனிதனின் பழகும் தன்மை அவனை வளர்ச்சி அடையச்செய்ததே தவிர அவை மனிதனை வளர்க்கவோ மாற்றவோ இல்லை.

---


திராவிடம் அழிந்தது!
அதன் பின்
புது யுகம் பூத்தது!
அதிலே,

கதிரவன் காய்ந்தான் — மலர்கள் மலர்ந்தன
பறவைகள் பாடின — குயில்கள் கூவின
மயில்கள் ஆடின — தென்றல் வீசிற்று

ஆனால் மனிதன் மட்டும் இல்லை!
நன்றி கெட்ட திராவிடன் ஒருவன் கூட இல்லை!

**ஏன்?**

இவைகளை விளக்கவே

# அழியட்டுமே திராவிடம்

[ துறையூர் நாராயணன் எழுதியது ]

விலை அணா எட்டு, 25% கமிஷன் உண்டு.

விவரங்களுக்கு:

**புரட்சிப் பதிப்பகம், துறையூர்.**

# மனிதனின் வளர்ச்சி

பக்த சிரோமணிகள் ஒரு பெரிய கேள்வியைத்தூக்கி எறிந்துவிட்டு வெற்றிக்களிப்போடு சுற்றும் முற்றும் பார்த்துக்கொள்வார்கள். இந்தப்பழகும் தன்மையையும் பழக்கும் தன்மையையும் படைத்தது யார்? விஞ்ஞானத்தில் மின்சாரம் சொல்லக்கூடியதாய் எங்கும் இருப்பதாய்க் கருதப்படும் ஈதரைப்போல் இந்தத் தன்மைகளுக்கெல்லாம் அடிப்படையாக இருப்பது எது...? என்றெல்லாம்கேள்விகளால் நம்மைத்துளைப்பார்கள்.

யோசிப்போம்!

மனிதனின் பழகும் தன்மை ஆரம்பத்தில் எலும்பு நரம்பில்லாமல் தோன்றிய, உயிர் அணு அடைந்த அந்த முதல் உருவம், அந்த முதல் உயிர்ப்பிராணி இருக்கிறதே அது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய், மண்ணிலும், நீரிலும், வானிலும் அடைந்த வளர்ச்சியின் முதிர்ச்சிதான் மனிதனும் அவனுடைய பழகும் தன்மையும். அதைப்போலவே உண்டானதுதான் இயற்கையும் அதன் பழகும் தன்மையும் இவற்றிற்கெல்லாம் அடிப்படை இந்தப் பூமியும் அதன் அமைப்பும்தான். அதற்கு அடிப்படை சூரியனிலிருந்து சிதறிய பூமி என்னும் இந்த ஒரு துளியின் இரசாயனக் கலப்பு முறையும் அது சூரியனிலிருந்து இருக்கும் தூரமும். அதற்கு அடிப்படை சூரியனின் சுழலும் தன்மையும் சுழற்றும் தன்மையும் கிரகங்களின் இழுப்புத்தன்மையும். அதற்கும் அடிப்படை வானில் மின்மினிகள் போல் தோன்றும் நட்சத்திரங்கள். அவற்றிற்கடிப்படை அவையே தான்.

இவைதாம் இயற்கை என்றால் ஆம் இவை இயற்கையே! எது இருக்கிறதோ அது தான் இயற்கை என்றால்,

எது எப்படி இருக்கிறதோ அது அப்படி இருப்பது தான் இயற்கை என்றால், பின்னர் இயற்கைக்கு வேறொரு அடிப்படை இருக்கவேண்டிய அவசியம் இல்லை. இருக்கவும் முடியாது. அப்படி ஒரு அடிப்படை இருந்தால் அதுவுமே இயற்கை என்ற இந்தத்தத்துவத்தில் அடங்கிவிடும்.

விலங்கில் விலங்காக இருந்த அந்த மனிதன் பசித்த போது உண்டு களைத்தபோது உறங்குபவனாக இருந்தான் என்பது கண்டோம்.

கற்குகைகளிலும் மரப்பொந்துகளிலும் அவன் வாழ்ந்தான். பின் குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்தான். இப்பொழுது நிரந்தரமாய் தங்குவதற்கு ஆபத்தில்லாத இடம் ஒன்றை அமைத்துக்கொள்ளவேண்டியதன் அவசியம் அவனுக்கு ஏற்பட்டது. தன்னைக்காட்டிலும் மிக அதிக வலிமை படைத்த கொடிய விலங்குகளினிடமிருந்து அவன் தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டி இருந்தது. அநேகம் விலங்குகளைத் தனி ஒரு மனிதனால் எதிர்த்து நிற்கமுடியவில்லை. அந்த விலங்குகளுக்கு அவன் இரையானான். ஆனால் அதே விலங்குகளைச் சில மனிதர்கள் ஒன்றாக சேர்ந்துவிட்டால் எதிர்த்துக்கொன்றுவிடலாம் என்பதும் அவற்றைத் தமக்கு உணவாகவும் உட்கொள்ளலாம் என்பதும் அவனுக்குத் தெரிந்தது.

பறவைகளிடத்தும், விலங்குகளிடத்தும் மற்ற எல்லா உயிர்ப்பிராணிகளிடத்தும் இன உணர்ச்சி தானாகத் தோன்றிய ஒன்றாகும். காக்கை காக்கையை நேசிக்கிறது. கழுகு கழுகை நேசிக்கிறது. கழுதைக்குக் கழுதை தான்

நட்பாக இருக்கமுடியும். இனம் இனமாகச் சேர்ந்து வாழும் இந்தத்தன்மையை இப்பொழுதும் எல்லா உயிர் வாழ் பிராணிகளிடத்தும் காண்கிறோம். சேர்ந்து வசிக்கும் தன்மை பிராணிகளின் உருவ அமைப்பிலிருந்து மாத்திரமே அல்ல. அவற்றின் உற்பத்தியின் அடிப்படையிலிருந்தே தோன்றியது ஆகும். ஆயினும் ஆரம்பத்தில் மனிதனிடம் சேர்ந்து வாழும் இந்த உணர்ச்சி ஊன்றுவதற்குச் சிறிது காலமேனும் ஆகியிருக்கவேண்டும்.

மூலைக்கு மூலை சிதறிக்கிடந்த மனிதர்கள் ஒன்று சேர்ந்து வாழ ஆரம்பித்தார்கள். இது அவர்களுடைய வேலைகளைச் சுலபமாக்கிற்று. சிலர் உணவு தேடவும் சிலர் தற்காப்புச்செய்யவும் ஆக வேலைப்பிரிவுகள் செய்துகொள்ளவும் வசதி உண்டாயிற்று. உணவைத்தான் மனிதன் முதல் முதலாகச் சேமித்துவைக்கக் கற்றிருப்பான். மாமிசத்துண்டுகள், இறந்த மிருகங்கள், அல்லது காய்கள், பழங்கள் இவற்றைத்தான் ஆரம்பத்தில் அவன் சேமித்திருக்கவும் வேண்டும். கற்கள் போன்ற ஆயுதங்களை உபயோகிக்க அவன் பழகியவுடன் அவற்றையும் சேமித்து வைக்கத் தொடங்கியிருப்பான்.

இப்பொழுது மனிதனுக்கு குகைகளும் மரப்பொந்துகளும் சௌகரியமாகத் தோன்றவில்லை. கூட்டம் அதிகரித்த போது அத்தனை மனிதர்களுக்கும் குகைகளும் மரப்பொந்துகளும் கிடைத்திருக்க முடியாதல்லவா? இயற்கையினிடமிருந்தே எல்லா வசதிகளையும் பெற்றுக்கொண்டிருந்த மனிதன் இயற்கை அவனுக்கு எல்லா வசதிகளையும் செய்துகொடுக்காது என்பதை உணர்ந்தபொழுது செயற்கையாகவும் சிலவற்றைச்செய்து கொள்ளவேண்டும்

என்று நினைத்தான். முதல் முதலாக ஒரு குடிசை அல்லது ஒரு குகையை வாழ வசதியுள்ளதாய் உண்டாக்கிக்கொள்வதற்காக அநேகம் மனிதர்கள் அநேகம் நாட்களாய் யோசனைசெய்து சலித்திருப்பார்கள். அவர்களுடைய மூதாதையர்களின் முயற்சியின் தோல்வியும் அவர்களுக்கு ஒத்தாசையாக இருந்திருக்கும். அதுவும் அவன் கட்டிய முதல் குடிசை இன்றைய குடிசை மாதிரியே இருந்திருக்கும் என்பதும் எதிர்பார்க்கமுடியாது தான் உபயோகித்த கல் ஆயுதங்களையும் வகைப்படுத்திக்கொள்ள முயன்றிருப்பான். உணவைச் சேமிக்கவும் நீரைச்சேமிக்கவும் ஆக மண்ணிலிருந்து பாண்டங்களைச் செய்யக்கற்றிருப்பான். காட்டுத் தீ எரியும் பொழுது தீயின் நல்ல தன்மைகள் சில அவன் நினைவில் பதிந்திருக்கும் கற்களைக் கடையும் பொழுது தீப்பொறி பறக்க அருகில் இருந்த இலைச் சருகில் எதிர்பாரவிதமாய் பற்றி எரிய இவ்விதமாகச் செயற்கையாகத் தீயை உண்டாக்கிக்கொள்ளவும் கற்றிருப்பான்.

இந்த ஆதி மனிதர்கள் வாழ்ந்த காலம் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருக்கவேண்டும் என்று சரித்திர ஆசிரியர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தக் காலம் இன்னும் சில ஆயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டதாக இருக்கவேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். ஆதி மனிதர்கள் சாதாரண கற்களை ஆயுதங்களாய் உபயோகித்துக்கொண்டு மரப்பொந்துகளில் வாழ்ந்துவந்த காலத்தைப் பழய கற்காலம் என்றும், அந்த மனிதர்கள் கூர்மையாகத் தீட்டப்பட்ட கற்களை உபயோகித்துத் தாங்களும சிறிது செய்யமுடியும் என்பதை உணர்ந்திருந்த காலத்தைப்புதிய கற்காலம் என்றும் சரித்திர ஆசிரியர்கள் பிரித்துக்கூறுகின்றனர். பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்

கும் இடையே, மனிதனின் இந்த இரண்டு நாகரீகங்களுக் கும் இடையே பல நூறு ஆண்டுகள் இருந்திருக்க வேண் டும் என்றால் அந்தக்கால மனிதனின் மூளை எவ்வளவு குறைந்த சக்தி உடையதாக இருந்திருக்கும் என்பதும் அவனுடைய வளர்ச்சி வேகம் எவ்வளவு மெல்ல மெல்ல ஓடியிருக்கிறது என்பதும் நாம் யோசித்துப் பார்க்கவேண் டும்.

காலத்திற்குக் காலம் மனிதனுடைய சிந்தனா சக்தி, யோசித்துப்பார்க்கும் திறமை வளர்ச்சி அடைந்து கொண்டேவந்திருக்கிறது. மனிதன் மூளை மனித வாழ்க் கையைப்பெரிதும் மாற்றிக்கொண்டே வந்திருக்கிறது. அந்த மூளை, அதாவது மனிதனின் அந்த அறிவும் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வந்திருக்கிறது. ஆரம்பத்தில் ஒரு குடிசையைச் சரியாக அமைத்துக் கொள்ளப் பல வருடங்கள் பல தலைமுறைகள் முயற்சி செய்யவேண்டியதாய் இருந்தது. அதே மனித இனம் தான் இன்று வானளாவும் மாடி மனைகளை வகையாகக் கட்டிக்கொள்ள திறமை படைத்ததாய் இருக்கிறது. அந்த மனித இனம் தான் இன்று உல்லாச பவனங்களில் ஒய்யா ரமாய்த்திரிகிறது. ஆரம்பத்தில் ஒரு இடத்திலிருந்து போகத் தன் கால்களையே நம்பி இருந்த அந்த மனிதனின் சந்ததி தான் இன்று மோட்டார்களையும், கப்பல்களையும், ஆகாய விமானங்களையும் கண்டுபிடித்திருக்கிறது.

வாழ்க்கையில் ஒரு உருண்டைக்கல்லைக் கூர்மையான தாக்கிக்கொள்ள மாத்திரமே உபயோகிக்கப்பட்டு வந்த அந்த மனிதனுடைய சிறு அறிவுதான் இன்று அவனு டைய வாழ்க்கை முழுவதையுமே ஆட்கொண்டுவிட்டது.

பழயகால மனிதனுக்கு இருந்த அறிவைவிட இன்றைய மனிதனுக்கு இருக்கும் அறிவு பல ஆயிரம் மடங்கு அதிகம். அதுமாத்திரம் அல்ல. பழங்கால மனிதனுக்கு இருந்த அறிவின் வலிமையையும் உணரும் தன்மையையும்விட இன்றைய மனிதனுக்கு அந்த வலிமைகள், அந்தத்தன்மைகள் மிக மிக, மிக மிக அதிகம்.

களிமண்ணையும் கல்லையும் மாத்திரமே உபயோகிக்கக் கற்றிருந்த மனிதன் உலோகங்களை உபயோகிக்கக் கற்றுக் கொண்டான். தீயின் உபயோகத்தைக் கண்டுபிடித்தான் நீராவியின் வலிமையைத் தெரிந்துகொண்டான். இயந்திரங்களை அமைக்கும் விதத்தை அறிந்துகொண்டான். விஞ்ஞானம் வளர்ந்தது. மனிதனுடைய வளர்ச்சியும் அளவில் அடங்காததாயிற்று.

இந்த வளர்ச்சியின் சரித்திரத்தைமாத்திரம் முழுக்க முழுக்க எழுதுவதென்றால் எண்ணற்ற ஏடுகளும் படிக்க எண்ணற்ற மாதங்களும் தேவைப்படும். ஆனால் அதை முழுவதும் படிக்க வேண்டுவதும் அவசியம் அல்லாததாகும்.

மனிதனின் இந்த வளர்ச்சிக்கிடையே சுமார் ஒரு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் முளைத்தவர்தான் கடவுள். மூன்று ஆயிரம் ஆண்டுகளாகக் கடவுளின் ஆட்சி இந்த மண் நிலத்தின்மேல் ஈடு இணையற்றதாக எங்கும் பரவி எதிர்ப்பாரற்று நடந்துகொண்டிருந்தது. ஆனால் ஐயோ...! (அழுகவில்லை) கடவுளின் யதேச்சாதிகாரத்திற்கு நான்கைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே பலதேசங்களைச் சேர்ந்த மனிதர்கள் அடிபணிய

மறுத்து விட்டார்கள். கடவுளின் ஆட்சிபீடம் இங்கிலாந்தில் சரியத்தொடங்கி ஐந்து நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. இந்தியாவில் இந்த நூற்றாண்டில் தான் கடவுளின் சாம்ராஜ்யத்தில் கலகலப்புத் தோன்றி இருக்கிறது. ஆனால்......?

இதற்கு முன்னால் அநேகமுறை கடவுளின் சாம்ராஜ்யம் கலகலத்திருக்கிறது. எத்தனையோ முறை இந்த சாம்ராஜ்யத்தில் புயல்கள் கிளம்பி இருக்கின்றன. எத்தனையோ தடவைகள் கலகங்களும், கிளர்ச்சிகளும் கொந்தளித்திருக்கின்றன. என்றைக்கு முதல் முதல் இந்தக்கடவுள் தோன்றினாரோ அன்றைக்கே கடவுளுக்கு எதிரியும் தோன்றிவிட்டான். மதகுருக்கள் அவனுக்குச் சாத்தான் என்று பெயர் வைத்தனர். அவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும். கடவுள் தோன்றிய அன்றைக்கே சாத்தானும் தோன்றிவிட்டான், கடவுளின் எதிரியும் முளைத்துவிட்டான் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள் அல்லவா? அதுவேபோதும் எத்தனையோ புயல்களும் புரட்சிகளும் தோன்றியும் கடவுளின் சாம்ராஜ்யம் அவற்றை எல்லாம் அடக்கி ஒழித்து வெற்றிக்கொடி நாட்டி விட்டது. இதற்குக் காரணம் மக்களின் மனோநிலை கடவுளுக்குச் சாதகமாக இருந்ததுதான். தவிர அந்தக்கால மக்களின் அறிவுக் கெட்டினவற்றைவிட அறிவுக்கு எட்டாதன அதிகம் இருந்ததால் அவர்கள் திரும்பத் திரும்பத் தங்களுடைய வல்லமைக்கு அதிகப்பட்ட ஏதாவது இருக்கவேண்டும் என்று திடமாக நம்பியதுதான்.

இருக்கட்டும், இப்பொழுது கடவுள் எப்படி முளைத்தார் என்பதை மாத்திரம் ஆராய்வோம். ★

# கடவுள் முளைத்தார்

முளைத்தார் கடவுள் மனிதனின் மூடத்தனத்தின் மேல். மனிதனின் அறியாமையின் மேல், அவனுடைய அச்சத்தின்மேல், அவனுடைய அடிமை தனத்தின்மேல். வளர்ந்தார். வளர்ந்தார் கடவுள் வானம் எட்டும்வரை... திக்குகள் முட்டும்வரை! வளர்ந்தார் கடவுள். மனிதனின் அறிவு வசப்படாத புலன் உணர்வுகள் புகுந்த, புகாத அத்தனை மூலைகளிலும் பணம்வரை வளர்ந்துவிட்டார்.

அழகுருவம் ஆனல், எரிதழலுருவம் ஆனல், வளர் கலை உருவம் ஆனல், எழில் பொருள் உருவம் ஆனர், அரசன் உருவம் தரித்தார். ஆண்டியாய்த்திரிந்தார். உலகத்தில் இல்லாத பொருள்கள் எல்லாம் என்னிடமே இருக்கின்றன என்று பசப்பினர். மனிதா உன்னல் செய்ய முடியாத எல்லாக் காரியங்களையும் செய்வேன் நான் என்று மிரட்டினர். உன்னுடைய உலகம் துன்ப மயமானது. இன்பமே நிறைந்த ஒரு ஸ்வர்க்கத்திற்கும் நீ பாபம் செய்தால், நீ என்னை நம்பாவிட்டால் உன்னை இட்டுப் பொசுக்குவதற்கு ஒரு நரகத்திற்கும் நான் அதிபதி என்று புளுகு மூட்டைகள் அவிழ்த்தார்! நான் நஞ்சைச் சாப்பிடுவேன் என்ருர். என் சாமர்த்தியம் உனக்கென்ன தெரியும்? பாம்புகளே எனக்கு அணிகள் ஆயிரம் தலைகள் உடைய பெரும் பாம்பு எனக்குப் படுக்கை என்ருர். தீயே ஆனவன் நான் என்ருர். பெரும் வெள்ளத்தை என் மயிராலேயே தாங்கிவிடுவேன் என்ருர். உன்னுடைய எல்லா ஆபத்துக்களிலிருந்து உன்னை ரட்சிப்பதோடு மாத்திரம் அல்லாமல் நீ இறந்து போனபின் உனக்கு நிலையான சாசுவதமான இன்பத்தைத் தரப்போகிறேன் என்றும் பொய்ச் சத்தியங்கள் வைத்தார்.

அட கடவுளே...! எத்தனை கற்பனைகள்... எத்தனை கதைகள்... மனிதனை ஏமாற்றுவதற்காக, இல்லாத நீ இருக்கிறேன் என்று சாதிப்பதற்காக இவ்வளவு மாய் மாலப்புரட்டுகளையும் வஞ்சக சூழ்ச்சிகளையும் ஏன் செய்ய வேண்டும்? இவ்வளவிலும் நீ செய்த சதி என்ன? மனித னின் மடமையை வளர்த்தாய்! அவ்வளவுதானே?

எண்ணிப்பாருங்கள்!

இவ்வளவையும் கடவுளா செய்தார்? இல்லை... இல்லவே இல்லை. முட்டாள் மனிதன் கடவுளைப் படைத் தான். பிற்காலத்தில் தோன்றிய சுயநலப் புழுக்கள் பிற மனிதனை அடிமையாக்கப் பெரும் சதிகள் செய்ய முனைந்த திருட்டுக் கயவர்கள், மனிதனை மடையனாக்க, மனிதனை முட்டாள் ஆக்கித் தங்கள் இன்பவாழ்க்கையின் மாட்சி யையும் ஆட்சியையும் நிலைநிறுத்திக்கொள்ள துடித்த பேர் கள் இவ்வளவையும் செய்தார்கள்.

பாருங்களேன் அரசன் மகாவிஷ்ணுவின் அம்சம். அந் தணன் பிரம்மனின் அம்சம். இப்படி இப்படியாக...... இந்த அரசர்களும் பிராமணர்களும் வாழ்வதற்காக மகா விஷ்ணுக்களையும் பிரம்மாக்களையும் சிவன்களையும் வாழ வைத்தார்கள். முதலில் கடவுள் எப்படி முளைத்தார் என்பதை மாத்திரம் பார்ப்போம்.

தணிக்கமுடியாத தாகம். கண்கள் சுழழ்கின்றன. நாவோ வரண்டுவிட்டது. ஒரு மனிதன் தண்ணீர் கொடுக் கிறான். தாகம் தணிக்கப்பட்ட மனிதனுடைய மனத்திலே எத்தகைய மகிழ்ச்சியும் மயக்கமும் உண்டாகும். அந்தத் தண்ணீர் அந்தக்கணத்தில் கிடைக்காமல் இருந்திருந்தால்

அவனுடைய உயிரே போயிருக்கும். தண்ணீர் கொடுத்த அந்த மனிதனுக்குத் தன் நன்றி அறிவையும் பணிவையும் காட்டுகிறுன். தாகம்தணிக்கப்பட்ட மனிதன் அவனுக்காக எந்த உதவியும் செய்யத்தயார் ஆகிறுன். அவன் கட்டளை யைக்கூட மதியாமல் கீழ்ப்படிகிறுன். அவனிடம் மனப் பூர்வமான அன்புகாட்டுகிறுன். பக்தி காட்டுகிறுன். இந்த அடிப்படையில் பிறந்ததுதான் பக்தி. தண்ணீர் கொடுத்த வனிடமே இவ்வளவு அன்பும் பக்தியும் பிறக்கும் என்றுல் அண்ட பேரண்டங்களையும் படைத்து இந்தப்பிறவியையும் அளித்தவனுக்கு மனிதன் எவ்வளவு பக்தி செலுத்த வேண்டும்?

தணிக்கமுடியாத தாகத்துடன் மயங்கி விழப்போகும் நிலையில் அந்த ஆதிமனிதன் வருகிறுன். அவனுடைய உருவத்தை மனக்கண்முன் வைத்துப்பார்ப்போம். பரட் டைத் தலை பெரியகண்கள் தாகத்தால் உருள்கின்றன. நாவும் முன்னுல் தள்ளிவிட்டது. அவனுடைய பெரிய கைகளும் கால்களும் துவண்டுபோய்விட்டன. இடுப்பில் ஒரு மரப்பட்டையை உடுத்தியிருக்கிறுன். அதுவும் அவிழ்ந்துவிழும் நிலையில் இருக்கிறது கையில் கூர்மை யான ஒருகல். அவன்சோர்ந்து போய்விட்டான். கையி லிருந்த கல்கூட நழுவி விழுகிறது இந்தக்கணத்தில் எதிரே ஓடும் ஒரு இனிய அருவி ஒன்றை அவன் காண்கிறுன். அடடா...... அமிர்தத்தை கண்டால்கூட அவன் அவ்வளவு ஆனந்தம் அடையமாட்டான். அந்த நீர், அவன் உயிரைமீட்ட அந்த அருவி... அது அப்படியே கடவுள்தான் என்று சொன்னுலும் அவன் கேட்கத்தயார். தாகத்தைத்தணித்த அந்த நீருக்கு அவன் ஆயிரம் தோப்

புக் காரணங்கள் வேண்டுமானாலும் போடத்தயார். தாகத்தைத்தணிப்பது தண்ணீர், அது இல்லாவிட்டால் மனிதன் வாழமுடியாது. அது எப்படி வந்தது என்பதோ அவனுக்குத்தெரியாது. அது கடவுள். அது இல்லாவிட்டால் அவன் உயிர் வாழமுடியாது. ரொம்பசரி. நீர் கடவுள். அந்த நீர், அந்த அருவி மலையில் இருந்து ஓடி வருகிறது. அந்த மலையும் கடவுள். மலையிலிருந்து நீர் வரும் வழியான ஆறும் கடவுள். அங்கோ... ஆறு மலையில்கொட்டிய மழையால் பெருவெள்ளமாகக் கரைபுரண்டு அருகிலிருந்த மரங்களையும் மட்டைகளையும் அடித்துக்கொண்டு பயங்கர உருவத்தோடு புரண்டு செல்கிறது... அடடா... நதிக்கடவுளின் வலிமைதான் என்னே! ஓ... நதிக்கடவுள் போய் ஒரு பெரும் நீர் வெள்ளத்தில், இடைவிடாமல் முழங்கிக் கூச்சலிட்டுப் புரண்டுகொண்டுகிடக்கும் ஒரு பெரும் வெள்ளக்கடலில் இரண்டறக்கலந்துவிட்டார்... ஆ... எங்கும் நிறைந்த இன்ப வெள்ளமே... உன் காட்சியே மாட்சி மிக்கது... ஏ கடலே... நீயும் கடவுள்.

ஆற்று வெள்ளம் அளவிலா வலிமை படைத்தது. அதன் வலிமைக்கும் காரணமோ இந்த மனிதனுக்கும் புரியவில்லை. அது இவனையும் வம்சத்தோடு அடித்துக்கொண்டு போகும் வலிமை படைத்ததாக இருக்கிறது. அவனுக்கு அச்சமே உண்டாகிறது. ஆ... கடவுளின் பெருமைதான் என்ன? அவரின் வலிமை தான் என்ன?

மேகம்தான் இந்த நீரைக் கொட்டிற்று என்று யாரோ சொன்னார்கள். அல்லது யாரோ கண்டுபிடித்தார்கள். இந்த அதிசய உண்மையை ஆதி மனிதன் கேட்டு ரொம்பவும் வியப்படைந்திருப்பான். அடுத்த தடவை முகிலைக்

காணும்பொழுது ஏ...காருண்ய முகிலே...உன் கருணை தான் என்ன? வலிமைதான் என்ன...? நீயன்றோ கடவுள் என்று அவன் வணங்கி இருப்பான்.

மரங்கள் சடசடவென்று முறிந்துவிழப் புயல் குமுறிற்று. புயலின் வலிமை அளவற்றது. அது தோன்றிய காரணமோ மூலமோ முடிவோ மனிதனுக்கு விளங்கவில்லை ஏ...புயலே...நீ கடவுள். ஒளியை தரும் கதிரே நீ கடவுள் வெப்பம் தரும் கதிரே உன்னை நாங்கள் எப்படி வாழ்த்தப் போகிறோம்? எப்படி வணங்கப்போகிறோம்? கடவுள் என்றால் நீ தான் எல்லோருக்கும் பெரிய கடவுள்! மண், எல்லை இல்லாமல் பரந்தது. மனிதனுடைய வாழ்க்கைக்கே ஆதாரமானது. எண்ணற்ற உயிர்ப்பிராணிகளைத்தாங்கிக் கொண்டிருப்பது. உணவை விளைவித்துக்கொடுப்பது... ஏ...நிலமே நீ கடவுள். காற்றில்லாமல் கணமேனும் உயிர் வாழமுடியாது. மூச்சுக்கு ஆதாரமாகிய காற்றே நீ கடவுள். ஆகாயம்...அது என்னவென்றே தெரியவில்லை... ஏ...வானமே ..நீ கடவுள்...!

இவ்வாறுதான் ஆரியர்கள் தங்கள் கடவுள்களைத் தோற்றுவித்தார்கள். இவற்றை நாம் சொல்லவில்லை. ஆரியர்களின் வேதங்கள் சொல்கின்றன. சரித்திரம் சொல்கிறது. எவை எவை தங்களுடைய அறிவு ஆராய்ச்சிகளுக்குப்புலப்படவில்லையோ அவை எல்லாம் கடவுள்கள். எவற்றின் வலிமையை தங்களால் அளவிடமுடியவில்லையோ அவை கடவுள்கள். எவை தங்களுக்கு அல்லும் பகலும்தொந்தரவுவிளைவித்தனவோ, எவற்றைக்கண்டு தாங்கள் அஞ்சி நடுங்க வேண்டியதாக இருந்ததோ அவை எல்லாம் கடவுள்கள்!

காளிக்குச் சிங்கம் வாகனம். சிவன் புலியை உரித்தவன். விஷ்ணு ஆயிரம் தலைபடைத்த நாகன் மேல் நித்திய நித்திரை செய்பவன். மனிதன் படைத்த கடவுள்கள் எப்படி இருக்கின்றன பார்த்தீர்களா? எவற்றின் வலிமை தங்கள் கட்டுக்கு அடங்கவில்லையோ, எவற்றைக்கண்டு தாங்கள் அஞ்சினார்களோ அவற்றை வென்றவர்கள், அடக்கி விட்டவர்களே மனிதனுக்கும் கடவுள்கள். அப்படித் தானே இருக்கவேண்டும்?

பழயகால மனிதர்கள், மனிதக் குரங்குகளையும், பெரும் பாம்புகளையும் உயிருடனேயே வணங்கி வந்தார்கள் என்பனவற்றிற்கும் ஆதாரங்கள் இருக்கின்றன. இன்றைக்கும் நமது கிராமங்களில் நாகப்பாம்புக்குப் பொங்கல் வைத்துப் புற்றில் உணவுகொண்டுபோய்ப் போடுகின்றனர் அல்லவா?

இன்னும், வைசூரி வந்தது. மக்களைப் பெருவாரியாக வாரிக்கொண்டு போயிற்று. ஒரு மாரியம்மன் தோன்றினாள். காலரா வந்தது, ப்ளேக் வந்தது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மாகாளி அம்மன்கள் தோன்றினார்கள். தங்களைக் கொன்ற நோய்கள், தங்கள் வைத்தியத்தின் எல்லைக்கு அப்பால் நின்ற நோய்கள், இவை பயங்கரமான கிருமிகளால் தோன்றியவை. ஆனால் அது அந்த மனிதனுக்குத் தெரியவில்லை. உடனே இவற்றிற்கும் ஒவ்வொரு அம்மன்களைத் தோற்றி வைக்கிற அளவுக்கு அந்த மனிதர்களுடைய அறிவு இருட்டடிக்கப்படிருந்ததென்றால் இந்த மடமையை அளவிடத்தான் முடிகுவதா? எத்தனை அம்மன்கள், எத்தனை அண்ணல்கள். நிலம் கடவுள், நீர் கடவுள் என்று தொழுத ஆரியர்கள் கூட

பிறப்புக் கொரு கடவுள், காப்பதற் கொரு கடவுள், அழிப் பதற் கொரு கடவுள் என்று வகுத்துக்கொண்டனர். கடவுளின் இலாகா அடக்க முடியாத கடினம் நிறைந்த தாகி விட்டதோ என்னவோ அவர் படைப்பு, காப்பு, அழிப்பு என்று தம் இலாகாக்களை மூன்றாக்கிக் கொண்டனர்.

இதிலும் ஆரியர்கள் கெட்டிக்காரர்கள். வளமற்ற இடங்களை விட்டு வளமிக்க நாடுகளைச் சென்று ஆக்ரமிக் குந்தோறும் தங்கள் கடவுள்களோடு அந்த மக்களுக் கிடையே 'வந்த கடவுள்களையும் சேர்த்துகொண்டார்கள். சிவன் முருகன் முதலிய திராவிடர் கடவுள்கள் ஆரிய மதத்தில் ஏறின. விஷ்ணு பிரம்மா முதலிய ஆரியர் கட வுள்களை திராவிடர்களும் ஏற்றுக்கொள்ளும்படிச் செய் தனர்.

இன்னும் மனிதன் எவற்றின் பிறப்பு, வளர்ப்பு, தன்மை முதலியவற்றைத்தன்னால் அறிந்துகொள்ள முடிய வில்லையோ, இயற்கையின் எந்த மாற்றங்களுக்குத் தன்னால் காரணம் அறிந்துகொள்ள முடியவில்லையோ அவற்றை எல்லாம் கடவுள்களின் செயல்களில் ஏற்றினான். அவற்றையெல்லாம் தன் மதத்தில் ஏற்றிக்கொண்டான். அவற்றைத் தான் நம்பியதோடு பிறரையும் நம்பச் செய் தான் என்பதற்கு ஆதாரங்கள் எண்ணற்றவை காட்டக் கூடும்.

கடல் எப்படித் தோன்றியது என்பது மனிதனுக்குப் புரியவில்லை. உடனே சாகரர்கள் தோன்றினார்கள். தவம் செய்தார்கள். இறைவன் கங்கையைத் தன் சடைமுடி யில் தாங்கி ஒரு மயிர்க்கால் வழியாக இந்த ஏழு கடல்

களும் நிறையும்படி அவ்வளவு தண்ணீரையும் பாய்ச்சினர். பாருங்கள் விந்தையை! ஆனால் இன்றைக்கோ கடல்கள் எப்படித் தோன்றின என்பதை மனிதனின் உண்மையான காரண காரியங்களோடு உணர்ந்துவிட்டது. இன்றைக்கு சகரர்கள் கடல் தோண்டின கதையையும், இறைவன் கங்கையைத் தலையில் தாங்கிய கதையையும் யாரேனும் நம்பினால் அவன் மடையனாகத் தவிர வேறு விதமாய் இருக்க முடியாது. கிரஹணங்கள் தோன்றின. இதை மனிதன் உணர்ந்தான். காரணமே தெரியவில்லை. உடனே இங்கும் கடவுளின் திருவிளையாடல் நடந்தது. திரை மறைவு வேலை நடந்தது. இதற்கு ஒரு கதையை எவனோ வது ஒருவன் அவிழ்த்துவிட்டிருப்பான். மதத்தின் பெயரால் அதை எல்லோரும் நம்ப வேண்டும் என்ற கொடிய சட்டம் உண்டாக்கப்பட்டது, பெரும்பாம்புகள் மனிதனின் கற்பனையிலிருந்து புறப்பட்டு சூரியனையும் சந்திரனையும் விழுங்கவும் உமிழவும் போயின. என்ன ஆச்சரியம், அங்கே பகலவன் பாம்பு கடித்துக் கிடக்கிறானே என்பதற்காக இங்கே உணவு உண்ணுபவர்கள் உண்ணுவதும் நஞ்சாகும் என்ற கதைகூட மதத்தின் பெயரால் வழக்கம் ஆக்கப்பட்டது. நம்பச் செய்யப்பட்டது. ஏன் எவ்வாறு என்று கேட்காமல் மதத்தின் பெயரால் எதைச் சொன்னாலும் அதை நம்பவேண்டும் என்று சட்டத்தால் அடக்கப்பட்டான். இன்றைக்குக் கிரஹணங்கள் தோன்றுவதன் உண்மைக் காரணம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. அது பலருக்கும் தெரிந்தும்விட்டது, இன்றைக்குச் சந்திரனைச் சூரியனைப் பாம்பு சாப்பிட்ட கதையை எவனாவது நம்புவானா? மதி குறைந்தது. வளர்ந்தது. சந்திரனுடைய இந்தப் பருவ மாற்றங்கள் மனிதனுக்குப் புரியவில்லை.

பிறந்தான் ஒரு தக்கன். சபித்தான் சந்திரனை. சந்திரன் வளர்ந்தான் தேய்ந்தான். எப்படி, ஏன்? ஏவ்வாறு என்று கேட்பது யார்? கடவுளே இந்தக் காரியங்களைச் செய் வித்ததாகக் காரண காரியங்களோடு கதைகள் அவிழ்த்து விடப்பட்டபின் இது எப்படி, ஏன் நிகழ்ந்தது என்று யாராலாவது கேட்கமுடியுமா? இன்று சந்திரன் குறைவதற்கும் வளர்வதற்கும் காரணம் தெரிந்துவிட்டது. விஞ்ஞானம் இந்தக் கதையையும் சாப்பிட்டுவிட்டது. ஐயய்யோ......! அக்ரமம்......! அக்ரமம்!

இந்தக் கதைகளை உண்டாக்கியவர்கள் யார்? திரி காலமும் உணர்ந்த மெய்ஞ்ஞான முனிவர்கள். இதை உண்மை என்று பரவச் செய்தவர்கள் யார்? கடவுளை நேருக்கு நேர் கண்டு அவன் ஆனந்தத் திருவடிகளில் அடைக்கலம் புகுந்து ஆனந்த வெள்ளத்தில் வெள்ளமான இறைவனடியார். பெரும் முனிவர்கள். இந்தக் கதை களில் இணைந்திருப்பவர்கள் யாவர்? எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல இறைவனும் அவனுடைய திருக்கூட்டங் களும். ஆனால்.........? பகுத்தறிவின் முன் பட்டுப் போயினவே இந்தக் கதைகள்? விஞ்ஞானத்தின் முன் வீழ்ந்துவிட்டனவே இந்தக் கதைகள்? மனிதன் கண்டு பிடித்த உண்மைகளுக்கு முன்னால் உலர்ந்து சருகாகிப் பறந்து விட்டனவே இந்தக் கதைகள்?

அப்படியானால் இந்தக் குற்றங்கள் யாருடையவை? ஒன்று இந்தக் கதைகளில் அனாவசியமாய்த் தலையை மாட்டிக்கொண்டு ஆபத்தில் சிக்கிக்கொண்ட கடவுள் பொய்யனாக இருக்கவேண்டும். அல்லது இந்தக் கடவுள் திருவிளையாடல்களைக் கண்டுபிடித்த முனிவர்களும் அவ

னுடைய மெய்யன்பர்களும் பொய்பர்களாக இருக்க வேண்டும். அல்லது விஞ்ஞானம் தான் பொய்யானதாக இருக்கவேண்டும். ஆனால் விஞ்ஞானமோ பொய்யாக இருக்கமுடியாது. இவை மனிதனின் அறிவு உணர்ந்த உண்மைகள். இந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு உலகத்தின் மேல் அனுதினமும் அநேக காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. மேலும் மேலும் புதிய விஷயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அது மனிதனின் வாழ்க்கையில் அன்றாடம் உதவிக்கொண்டு வருகிறது.

இந்தமாதிரிக் கதைகள் எண்ணற்றவை புராணக் கதைகளிலே புதைந்து கிடப்பதைப் பார்க்கலாம்.

இப்பொழுது நமக்குத் தெளிவாகத் தெரிந்துவிடுகிறது. அறிவின் வலிமையற்றவனாக இருந்த மனிதன் தன் புலன் அறிவுகளில் எட்டாதன எது நிகழ்ந்தாலும் எது இருந்தாலும் அதைக் கடவுளாகவும் கடவுளின் செயலாகவும் கருதினான். அவனுக்கு அச்சம் விளைவித்த எல்லாவற்றையும் கடவுளின் செயலாகவே கருதினான்.

கடவுள் என்ற கற்பனை தோன்றியது? அது என் வளர்ந்தது? இதை நாம் அடுத்தபடியாக கவனிக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்தக் கற்பனை இன்னும் மெய்யாக நம்பப்பட்டிருக்கிறது என்பதன் காரணம் விளங்கும்.

★

# முடபக்தியும் மதமும்

கடவுளை நாம் கற்பனை என்று கூறுகிறோம்? ஏன்? கடவுள் என்ற ஒன்று, எங்கும் நிறைந்த, எல்லாம் கடந்த ஒன்று இருக்கமுடியாது என்கிறோம்? ஏன்? அந்த ஒன்று காண, முகர, கேட்க, தொட, சுவைக்க முடியாததாக இருக்கிறது என்பதனால் அல்ல அந்த ஒன்று நம்முடைய ஐம்புலன்களில் எட்டாமலும் அறிவின் பார்வைக்கும் ஆராய்ச்சிக்கும் தோன்றாமல் இருப்பதனாலேயே மாத்திர மும் அல்ல, கடவுளின் செயல்கள், கடவுளைப் பற்றிய கதைகள், தத்துவங்கள் ஆகியவை அனுபவ ஆராய்ச்சி களின் முன்னால் பகுத்தறிவின் பார்வையின் முன்னால் பொய்பட்டுப்போகின்றன என்பதனால் மாத்திரமேயும் அல்ல, அப்படி ஒன்று, கடவுள் என்ற ஒன்று இருக்க முடியாது, இருக்கவேண்டியதன் அவசியமும் இல்லை என் பதனாலேயே தான்.

கடவுள் எதையும் படைக்கவில்லை, எதற்கும் அடிப் படையாக இல்லை, எங்கும் இருக்கவில்லை, எதனாலும் அறியமுடியவில்லை. அப்படி இருக்க இன்றைக்கு மனி தனின் மன நம்பிக்கையில் மாத்திரம் அவர் இருக்க வேண்டியதன் அவசியம் என்ன இருக்கிறது? இன்று மனிதனுடைய அந்த நம்பிக்கை கூட கடவுளைப்பற்றிய தீவிர வேட்கையில் இல்லை. ஏதோ அர்த்தமற்ற கனவி லும் கற்பனையிலும் மாத்திரம் தான் அவர் உயிரைவைத் துக்கொண்டிருக்கிறார். மனிதனுடைய மூடத்தனத்தின் மேலும் அவனுடைய அறிவின் குறைபாடுகளின்மேலும் தான் இன்னும் கடவுள் உயிர்வைத்துக்கொண்டிருக்கிறார் நாம் அறிவின் பூரண ஒளியையும் பெற்றாகவேண்டும்பூரண மனிதர்களாய் யாவரும் சமமாய். ஒரு நிகராய், ஒரு நிறை

யாய் வாழவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். எனவே இவற்றிற்குத்தடையாக இருக்கும் அந்தக்கடவுளை நாம் இன்னும் உயிரோடு வைத்துக்கொண்டிருக்கவேண்டும் என்பதற்கு எந்த அவசியமும் இல்லை.

மூடனாகவும் முரடனாகவும் இருந்த முதல் மனிதன் தன்னுடைய வலிமைக்கு அப்பாற்பட்ட எல்லாவற்றையுமே கடவுளாகக்கருதினான் என்று கண்டோம். இந்தக் கடவுளின் வளர்ச்சி அவனிடம் எப்படிப் பரவியது என்பதையும் காணவேண்டும்.

ஆரம்பத்தில் அவன் கடவுளை எந்த உருவத்திலும் வழிபட்டிருக்கமாட்டான். சூரியன், காற்று மண், அரசமரத்தடி, ஆற்றுத்துறை, யாரும் அற்ற பாழும் காட்டில் ஒரு பக்கம் இவற்றைத்தொழுதிருப்பான். இவற்றில் கடவுள் இருந்ததாகவும் அவர் ஏதோ ஒரு உருவத்தில் இருந்ததாகவும் அவன் நம்பி இருப்பான் பாம்பை கடவுள் என்று தொழுதான். பறவையைத் தொழுதான். அர்த்தமற்ற வெறும் இடத்தைத் தொழுதான். மரத்தடியைத் தொழுதான். சூரியனைத் தொழுதான் இவ்வாறு எதை எதையோ தொழுதான். தொழவேண்டும் என்னும் உணர்ச்சி அவன் மனதில் தோன்றியதற்கு மூலகாரணம் அச்சம் தான். தனக்கு இன்னல் விளைவித்தவைகளைக் கண்டு அவன் அஞ்சினான். தனக்கு உதவிசெய்பவைகளையும் உபயோககரமாயிருப்பவைகளையும் கண்டு நன்றி செலுத்தினான். தனக்குப் புரியாதவற்றைக்கண்டு வியப்படைந்தான் அவற்றில் ஏதோ மர்மம் இருக்கவேண்டும் என்று எண்ணினான். அவனுடைய கற்பனைகள் இவற்றைச்சுற்றி என்னென்னவோ கனவுகள் கண்டன.

என்னென்னவோ விசித்திரக் கதைகளும் கற்பனைகளும் அவன் மனதில் தோன்றின. இவற்றின் இந்த அடிப் படையில் அவன் இவற்றைத் தொழவேண்டும்; இவற்றி டம் பக்தி செலுத்தவேண்டும் இவற்றைக்கண்டு அஞ்ச வேண்டும் என்று எண்ணினன்.

கற்பனை செய்வதில் கெட்டிக்காரர்களாயிருந்த சிலர், கனவு காண்பதில் கெட்டிக்காரர்களாயிருந்த சிலர் கடவுள் இப்படி இருப்பார், அப்படி இருப்பார் என்று புழுக ஆரம்பித்தார்கள். அந்தக் கடவுள்கள் தங்கள் கனவுகளில் வந்து இப்படி என்னை வைத்து இப்படித் தொழவேண்டும் என்று வற்புறுத்தினர் என்றும், இப்படிச் செய்யாவிட் டால் மனிதர்களை இன்ன இன்ன விதங்களில் துன்புறுத் தப் போவதாகப் பயமுறுத்தினர் என்றும் கதைகள் அவிழ்த்தார்கள். வெறும் வாய் வார்த்தைகள் அவ்வள வாகப் பாமர மனிதர்களைப் பயமுறுத்தவில்லை, அவர் களின் மனதில் பதியவில்லை என்பதைக் கண்டபோது இவர்கள் துள்ளியும், குதித்தும், ஆடியும், ஆவேசம் வந்து விட்டதாகக்கூறியும் பசப்பினர்கள். பிறரை அச்சுறுத்தி னர்கள். தவிர கடவுளின் உருவம் மனிதனைவிடப் பெரிய தாய், மனிதனைவிட பயங்கரம் நிறைந்ததாய், மனிதனைவிட உக்ரம் மிக்கதாய் இருந்தது என்று பிறரை நம்பச்செய் தார்கள்.

கடவுளுக்கு உருவம் ஏற்பட்டது. அந்த உருவம் பயங்கரமானதாகவும் கையில் கோடாலி, வெட்டறுவாள் போன்ற ஆயுதங்களுடனும் தோன்றியது. அதன் வல்லமை பற்றியும் சக்தி பற்றியும் பெரிய கதைகள் புனைந்து கூறப்பட்டன. கடவுளுக்கு இந்த உருவத்தை

யும், தொழுவதற்கு முறையையும் வகுத்துக்கொடுத்த இந்தப் பூசாரிகள் இப்பொழுது மற்ற மனிதர்களால் தங்களைவிட உயர்ந்தவர்கள் என்றும் மேன்மையானவர்கள் என்றும் மதிக்கப்பட்டார்கள். சாமிக்குப் பூசை செய்து விட்டு ஜோராக வெறிவந்தபோது துள்ளிக் குதித்துச் சாமி ஆடிவிட்டு இவர்கள் பெரும் செல்வங்களும் இலவசமான சாப்பாடும், இஷ்டம்போல் திரியும் உரிமைகளும் மற்றவர்களை அதட்டி அடக்கி ஆளும் வசதிகளும் பெற்றனர். இவர்களுடைய புகழும் அதிகாரமும் மிகவும் பெருகியது.

குடம் குடமாக மது. சுவையுள்ள இறைச்சி தரும் மிருகங்கள். சத்துள்ள காய்கள் கனிகள் பலகாரங்கள் எல்லாம் கடவுளின் பெயரால் இந்தப் பூசாரிகளுக்குப் படைக்கப்பட்டன பூராவும் தாங்களே அனுபவிப்பதில் உண்டாகும் அருவெறுப்பை உணர்ந்தும் பூராவற்றையும் அனுபவிக்கும் திறமை தங்களுக்கு இல்லாமையாலும் இவர்கள் பூசைசெய்தபின் படைத்த மதுமாமிசங்களைப் பின்னால் படைத்தவர்களுக்கும் கொஞ்சம் திருப்பிக் கொடுக்கும் வழக்கமும் ஏற்பட்டது. முறையாக ஒவ்வொரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு நாளைக்குப் பூசைசெய்வது என்பனபோன்ற வழக்கங்களும் உண்டாயின. இவை இன்றைக்கும் நமது நாட்டிலேயே சில இடங்களில் நடைபெற்றுவருகின்றன.

இந்தத் துஷ்ட தேவதைகளைப் பூஜித்து வந்த மனிதர்களின் பூசாரிகள்தான் மேலும் மேலும் மற்ற மனிதர்கள் தங்களைப் பயங்கரமானவர்கள் என்று நம்பச்செய்வதற்காக எதிர்காலத்தை அறியும் சக்தி தங்களுக்கிருப்பதாகவும் மனிதர்களின் குறைகளையும் துன்பங்களையும்

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE, MADRAS 11684

தங்களால் தீர்த்துவைக்க முடியும் என்றும் கூறிக்கொண்டனர். இன்னும் பயங்கரமான பழக்க வழக்கங்களை ஏற்படுத்திக்கொண்டு மற்றவர்கள் எந்தக்கணத்திலும் தங்களைக்கண்டு அஞ்சும்படியாகச் செய்துவந்ததும் அல்லாமல் நரபலி, உயிர்ப்பலி அலகிட்டுக் கொள்ளுதல் போன்ற மற்ற சாதாரண மனிதர்களால் செய்யமுடியாத, சகிக்க முடியாத கொடூரமான காரியங்களையும் செய்யத் தொடங்கினர். மனிதர்களின் பக்தி சுறுசுறுப்போடு இருப்பதற்காகவும் அவர்கள் பூசாரிகளின் நடவடிக்கைகளைப்பற்றி யோசிக்காமல் இருப்பதற்காகவுமே விழாக்கள் கொண்டாடும் வழக்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

ஆரியர்களின் கடவுள் அமைப்பு, தொழும் முறை இவை முன்கூறியவற்றிலிருந்து வேறுபடுகின்றன. ஆரியர்கள் கடவுள்கள் உருவத்தில் சாதாரண மனிதர்களைப் போலும் கருணை, அன்பு போன்ற மேலான குணங்கள் உடையவர்களாகவும் நல்லவர்களாகவும் இருந்ததாக நம்பினார்கள். இவர்களுக்கிடையே தோன்றிய பூசாரிகள் ஒழுகிய முறையும் மாறுபாடானது. இவர்கள் சாதாரண மனிதர்களால் செய்யமுடியாத நிஷ்டை, யோகம், கர்மம் முதலியவற்றைக்கைக்கொண்டு மற்ற மனிதர்களை வியக்கச்செய்தனர். துறவறத்தின் மூலம் கடவுளை நேரில் காணக்கூடும் என்று கூறினர். கடவுளிடம் பாமரமனிதனின் பக்தி அதிகப்படுவதற்காக அவன் அளவுகடந்த செல்வத்திற்கதிபதியாக இருப்பதாகவும், அளவுகடந்த கல்விக்கும், வலிமைக்கும் அதிபதியாக இருப்பதாகவும் ஆனந்த நித்திரைபுரிபவனாக இருப்பவனாகவும் இன்ப துன்பங்களால் அசைக்கமுடியாதவனாக இருப்பதாகவும் கூறினர். இவற்றால் எல்லாம் பாமர மனிதனுடைய அறிவு வியப்படையா

மல் இருப்பதைக்காணும் பொழுது நாலு தலைகளும் எட்டுக்கைகளும் உள்ளவர் ஒரு கடவுள் என்றும், இன்னொரு கடவுள் ஆறு தலைகளும் பன்னிரண்டு கைகளும் உடையவர் என்றும் இன்னும் ஒரு பெரிய கடவுள் எண்ணற்ற தலைகளும் எண்ணற்ற கைகளும் உடையவராக இருப்பதாகவும் கதைத்தார்கள். கடவுள்களுக்கு இவர்கள் சேர்த்த விசித்திரத் தன்மைகள் பல இல்லாத பாற்கடலின் நடுவே இல்லாத ஆயிரம் தலைப்பாம்பின் மேல் இல்லாத அக்கடவுள் தூங்குகிறாராம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

கதை கேட்பதில் மனிதனுக்கு ருசி அதிகம். அதனால் கடவுள்களைப் பற்றிய கதைகளும் எத்தனை எத்தனையோ கோடிகள் தோன்றின. அவை மனிதனின் அறிவுக்கு எட்டாத விஷயங்களைப்பற்றி இருந்தன. சந்திரனுக்கு களங்கம் தோன்றிய கதை, தேய்வு வளர்வுதோன்றிய கதை, கிரஹணம் வந்த கதை இப்படியாக இன்னும் என்னென்ன கதைகளோ, எத்தனை எத்தனையோ தோன்றின.

கடவுள்களின் பொதுத்தன்மைகள் சில, அவர்கள் மேல் உலகத்தில் வசித்து, மனிதர்களின் கண்களுக்குத் தோன்றாமல் இருந்து, எல்லையற்ற வலிமை பொருந்தியதாக இருந்தது, நினைத்த இடத்தில் தோன்றவும் மறையவும் வல்லமை உள்ளதுவாய் இருந்தது போன்றனவாம்.

மனிதர்களின் குழுவில் அரசியலும் மதமும் ஒன்றை ஒன்று அடுத்தே பிறந்தது. ஒன்றை ஒன்று அடுத்தே வளர்ந்து வந்திருக்கிறது. எண்ணற்ற கடவுள்கள் எண்ணற்ற உருவங்களில் எண்ணற்ற தன்மைகளோடு தோன்

றின. இவற்றில் ஒரு கடவுளைப் பின்பற்றியவர்களுக்கும் இன்னொரு கடவுளைப் பின்பற்றியவர்களுக்கும் அபிப்பிராய பேதங்கள் இருந்தன. ஒரு கடவுளுக்கும் இன்னொரு கடவுளுக்கும் உருவ வேறுபாடு இருந்ததைப்போல் தன்மைகளிலும் தொழும் முறைகளிலும் கூடவேறுபாடு இருந்தது. இதில் என் கடவுள் பெரிது உன் கடவுள் சிறிது என்றும் என் கடவுளின் வலிமை பெரிது உன் கடவுளின் வலிமை சிறிது என்றும் போட்டிகள் கிளம்பின. இந்தக் கடவுள் போட்டிகள் வலுக்க வலுக்கப் பூசாரிகளின் கற்பனைகளும் வலுத்தன. கடவுள்களின் வலிமை பற்றிய கதைகளும் மலிந்தன.

மண் உலகத்தின் வேறுவேறு இடங்களில் வாழ்ந்து வந்த மனிதர்களுக்கிடையே கடவுளின் உருவ அமைப்புகளிலும் வழிபாடு முறைகளிலும் வேறுபாடுகள் இருந்ததாக அறிகிற போதிலும் இந்தக் கடவுளின் வளர்ச்சியைப் பொருத்தமட்டிலும் எல்லா மனிதர்களுக்கிடையிலும் மனிதர்களின் எல்லாக் கூட்டங்களுக்கிடையிலும்ஒரேவிதமான அடிப்படை தான் அமைந்திருக்கிறது. இந்தச் சமயத்தில் இந்தியாவில் ஆரிய திராவிடப் போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இதில் ஆரியர்களுக்குள்ளேயே பிரமம் பெரிது, விஷ்ணு பெரிது என்ற போராட்டங்கள் இருந்தன. இந்தப் போட்டியில் விஷ்ணுவைப் பற்றித் தோன்றின கனவுகள் அதிகம் ஆகி பிரமாவைத் தாழ்த்தத்தொடங்கின. கடைசியில் பிரம்மாவே விஷ்ணுவின் புத்திரராகமாறினர். ஆரியர்களையும் திராவிடர்களையும் குழப்புகின்ற அரசியல் இங்கே நடைப்பெற்றுக் கொண்டிருந்தது. பலவிதமான தந்திரங்களைமேற்கொண்டு ஆரியர்கள் திராவிடர்களைத் தோற்கடித்து அடிமையாக்கி

விட்டார்கள் என்றாலும் அவர்களுடைய அரசை எதிர்த்துக் கிளப்பின திராவிடர்களின் புரட்சிகளைச் சமாளிப்பது ஆரியர்களுக்குக்கடினமாக இருந்தது.

தந்திரங்களிலும் மந்திரங்களிலும் வல்லவர்களாக இருந்த ஆரியர்கள் திராவிடர்களை அடிமைப்படுத்திக் கொள்ள இந்தச் சமயத்தில் ஒரு பெரிய அரசியல் தந்திரத்தைக்கையாண்டனர். திராவிடர்களின் கடவுளான சிவன் ஆரியர்களின் கடவுள்களில் ஒருவராக ஆனார். அதோடுமாத்திரம் அல்லாமல் ஆரியர்களின் பெரிய கடவுளான விஷ்ணுவுக்குச் சமமானவராகவும் விஷ்ணுவைவிடப் பெரியவராகவும் கூட மாறினார். ஆரியர்களின் பூசாரிகளும் திராவிடர்களின் பூசாரிகளும் என்ன தில்லுமுல்லு தகிடுதத்தங்களைக் கையாண்டார்களோ தெரியவில்லை. ஆரியர்கள் தங்கள் கடவுள்களைத் திராவிடர்களின் கடவுள்களுக்குத் தாழ்ந்தவராக்கினார்கள். தாங்களும் திராவிடர்களின் கடவுள்களின் பெருமைகளை ஒப்புக்கொண்டு தொழுகவும் ஆரம்பித்தார்கள், இதற்குப்பதிலாக திராவிடப் பூசாரிகள் தங்கள் மக்களை ஆரியர்களுக்கு அடிமைப்படுத்தினார்கள். ஆரியர்களுக்கு ஏற்பட்ட இந்த அரசியல் வெற்றியே பிற்காலத்தில் அவர்களின் மதவெற்றியாகவும் அமைந்தது. சிவன் ஆரியர்களின் கடவுள்களில் ஒருவராக மாறிவிட்டதால் அவர்கள் அவர்கள் இஷ்டம்போல் கதைக்கட்டினார்கள். அதன் பயனாக திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் அசுரர்கள், அரக்கர்கள் என்ற மறைமுகமான பெயரால் திட்டப்பட்டும் அவற்றை எல்லாம் உணர்ந்துகொள்ளச் சக்தி அற்றவர்களாக ஆக்கப்பட்டார்கள். பின்னால் ராமாயணம்; மகாபாரதம் போன்ற கதைகள் எளிதாகத் திராவிடர்களை ஒப்புக்கொள்ளும்படிச்

செய்யப்பட்டன. அதன் பயனாக மேலும் மேலும் ஆரியர்களின் பெருமை வளர்ந்தோங்கியது. ஏற்கெனவே ஆட்சி பீடத்தின் அருகாமையில் இருந்த ஆரியர்கள் முதலிலேயே திராவிடக்குருக்கள்மாரைத் தங்கள் கைக்குள் போட்டுக் கொண்டிருந்ததால் சுலபமாக திராவிடர்களின் அரசர்களும் தங்களை எதிர்த்துக்கிளம்பாமல் செய்துகொண்டார்கள்.

ஆரியர்களை எதிர்த்துக் கிளம்பி, பயங்கரமான முறையில் திராவிடர்களைத் தட்டி எழுப்பி ஒன்று சேரச் செய்ய முயன்ற இரணியனும் இராவணனும் கொல்லப்பட்டதோடு மாத்திரம் அல்லாமல் ஆரியர்களின் சூழ்ச்சிகளால் அந்த மகா வீரர்களான திராவிடர்கள் தங்கள் சொந்த இனத்தைத் தட்டி எழுப்பச் செய்த முயற்சிகளில் அடைந்த தோல்விகளின் பயனாக அவர்களுடைய சொந்த இனத்தவராகிய திராவிடர்களாலேயே அசுரர்கள் என்று வெறுத்து ஒதுக்கப்படும் நிலைமைக்கு வந்துவிட்டனர். ஆரியர்களின் சூழ்ச்சிகளின் வலிமையை இது ஒருவாறு உணர்த்தும் என்று நினைக்கிறேன்.

ஆரியர்களின் பூசாரிகளும் திராவிடர்களின் பூசாரிகளும் எவ்வாறு ஒன்று சேர்ந்திருக்கக் கூடும் என்னும் கேள்வி எழலாம். கடவுள்களைப் பற்றி புழுகுவதில் திராவிடர்களைவிட ஆரியர்கள் கெட்டிக்காரர்களாக இருந்தார்கள். ஆனால் முதல் புரட்சிக்காரனான இரணியனோ கடவுள் இருந்ததையே நம்பவில்லை. இவன் பாம்புகளையும் பூதங்களையும் தொழ மறுத்துவிட்டான். ஆரம்பத்தில் சிவன் என்ற கடவுள் இருக்கக்கூடும் என்று அவன் நம்பிய போதிலும் பின்னால் அதுவும் வெறும் பூசாரிகளின் புரளி

என்பதை அவன் நன்முக உணர்ந்துகொண்டான். ஆனல் கடவுள் இருக்கிறர் என்ற நம்பிக்கையோ அந்தக்கால மக்களுக்கிடையே நன்முக வேரூன்றிக் கொண்டிருந்தது. அந்தக்கால மக்களைப் பூசாரிகள் நன்முக ஏமாற்றி வைத்திருந்தார்கள். அவர்களுக்குக் கடவுள் இல்லாமல் தாங்கள் வாழமுடியாது என்ற எண்ணம் ஊறிப்போயிருந்தது. இதனல் இரணியன் கடவுள் இல்லை என்று சொன்னதைக் கேட்டதும் அருவருப்படைந்தார்கள்.

பூசாரிகள் அரசனுடைய ஆதரவைப் பெறுவதற்காக அரசன் கடவுளுக்குச் சமம் என்று சொன்னர்கள். இரணியனே தானே கடவுள் என்று கூறிக்கொண்டான். இம்மாதிரி அரசாங்கம் தங்களின் ஆடம்பர வாழ்க்கையிலும் செல்வாக்கிலும் புகுந்துகொண்டு ஆட்டிவைத்தது திராவிடப் பூசாரிகளுக்குப் பிடிக்கவில்லை. இவர்கள் தங்களுடைய கதைகளால் மேலும் மக்களின் நம்பிக்கையையும் அரசனுடைய நம்பிக்கையையும் பாதுகாத்துக்கொள்ள முடியாது என்று உணர்ந்தபோது ஆரியப் பூசாரிகளின் உதவியை நாடினர்கள். இதுவே இரணியனுடைய தோல்விகரமான வீழ்ச்சிக்கு மறைமுகமான வித்தாக முடிந்தது. திராவிடர்களும் இரணியன் நரஸிம்ஹத்திஞலேயே கொல்லப்பட்டதாக நம்பினதற்கு மத சம்பந்தமான, கடவுள் சம்பந்தமான அடிப்படை இருக்க வேண்டும் என்பதில் ஐயப்படுவதற்கு ஏது இல்லை அல்லவா?

இதேமாதிரி கடவுள் சம்பந்தமான போட்டி கிரேக்கர்களுக்கிடையேயும் இருந்ததை கிரேக்க மகாகவி ஹோமரின் ஒடிஸியிலும் யூலிஸெஸ்ஸிலும் காணலாம். இத்தாலியர்களுக்கிடையேயும் கடவுள்களைப்பற்றியும் அவர்

களின் வலிமைகள் பற்றியும் போட்டிகள் இருந்தன. அராபியர்களுக்கிடையே இவ்விதமான போட்டிகள் இருந்ததாக இஸ்லாம் மதம் தோன்றிய காலத்தின் சரித்திரத்தைப்புரட்டிப் பார்ப்பவர்கள் உணர்வார்கள். ஆங்கிலேயர், ஜர்மானியர் போன்ற ஜாதியார்கள் கிறிஸ்துவ மதம் தீவிரமாய் பரவினபின் இந்தக் கடவுள் கதைகளை அடியோடு மறந்துவிட்டார்கள். ஜப்பானியர்களும் சைனர்களும் புத்த மதத்தில் ஊறியபின் பழைய கடவுள்களை மறந்திருக்க வேண்டும். துரதிர்ஷ்டம் பிடித்த இந்தியர்கள் தான் இத்தனை காலம் ஆகியும் இந்தக் கடவுள்களை விட்டுவிடவே இல்லை. இதற்குக் காரணம், மற்ற நாடுகளில் தோன்றிய மதாச்சாரியர்கள் முகம்மது நபியும், கிறிஸ்துவும் பழைய கடவுள்களை அடியோடு புறக்கணித்துவிட்டுப் புதிய கர்த்தனைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் போதித்தார்கள். அவர் ஒருவரே கடவுளாக இருக்க முடியும் என்று அந்த மக்களை நம்பச் செய்வதற்கு வசதியாய் அந்தக் காலத்தில் அந்த மக்களுக்கிடையே இருந்த கடவுள்கள் பலஹீனமானவர்களாக இருந்தனர். ஆனால் இந்தியாவிலோ சூழ்ச்சித் திறன் மிக்க ஆரியர்களின் பக்கத்தில் இருந்தார் கடவுள். அதனால் அவர் தப்பித்துக் கொண்டார். ஆரியர்கள் தங்கள் மதத்தில் பல கடவுள்களுக்கும் இடம் கொடுத்தனர். புத்த மதம் தோன்றியது. அதன் உயர்ந்த கருத்துக்களை இழுத்துப் பறித்துத் தமது மதத்திற்குள் போட்டுக்கொண்டனர். சமண மதம் தோன்றியது. அதன் சீரியக் கருத்துக்களும் ஆரிய மதத்தில் புகுந்தன. ஆரியர்களின் மதம் என்று சொல்லப்படுவது இதுதான் என்று வகுத்துக் கூறப்படாத முறையில் வாய்மொழியாகவே இருந்தது. ஆரியர்களின் மதா

சாரியர்களும் ஒரு வகை இல்லாமல், பலராக, மிகப் பல ராக இருந்தனர். இதன் பலன் என்ன? வேறு ஒரு மதத்தின் கருத்து தங்களுடையதைவிட உயர்ந்ததாக இருந்தது என்று கண்டால் உடனே, அந்தக் கருத்து களை...... அவற்றை இவன் என்ன புதிதாகக் கண்டு பிடித்துவிட்டான். எங்கள் பாட்டனின் பாட்டனே இவற்றை எல்லாம் சொல்லி இருந்தானே என்று நாலு ஸ்லோகங்களைப் புதிதாகப் பாடிக்காட்டவும் அவையும் தங்களுடைய மதங்களிலேயே இருந்ததாகச் சாதிக்கவும் முடிந்தது. இதனால்தான் இந்தியாவில் வேறு மதங்கள் நிலைக்க முடியவில்லை. பலதிறப்பட்ட பல கடவுள்களின் வாழ்க்கையும் இங்கே முடியவில்லை. அந்தக் கடவுள்கள் அத்தனைபேரும் ஆரியர்களின் கீழ் அடைக்கலம் புகுந் திருந்தனர். ஆரியர்கள் தங்களுக்கும் மதம் என்று ஒன்று இருக்க வேண்டும் என்று கருதியபோது தாங்கள் சொன்ன, சொல்லப்போகிற எல்லா கருத்துக்களும் சேர்ந் தது இந்துமதம் என்று பெயர் கொடுத்தனர்.

எல்லா தேசங்களிலும் மனிதக் கூட்டங்கள் தங்கள் இச்சைபோல் திரிந்துகொண்டு மனிதர்கள் மனம்போன போக்கில் நடந்துகொண்டிருந்த போழுதே மதங்கள் தோன்றின. இந்த இடத்தில் மனிதக்கூட்டங்களின் அரசியல் வளர்ச்சியைச் சிறிது கவனித்தால்தான் மதங்க ளின் வளர்ச்சியின் அடிப்படையை நாம் உணரமுடியும்.

மனிதர்கள் கூட்டம் கூட்டமாக வசிக்க ஆரம்பித் தார்கள் என்பது கண்டோம். மெல்ல மெல்ல நாகரிகம் வளர்ந்தது, மொழியும் உண்டாயிற்று. எப்பொழுது கூட்டங் கூட்டங்களாக வசிக்க ஆரம்பித்தார்களோ அப்

பொழுதே மொழியின் அவசியமும் உண்டாயிற்று. இன்னும் பல தேவைகளும் உண்டாயின. மனிதர்கள் உடை உடுத்தார்கள். இரும்பாலான ஆயுதங்களை உண்டாக்கினார்கள். பொன்னை ஆபரணங்களாக அணிந்தார்கள். தீயைச் சேமித்து வைத்தார்கள். உணவுப் பொருள்களை மலைமலையாகக் குவித்துவைத்தார்கள். ஆடைகள் அணியப் பழகிக்கொண்டார்கள். இவ்வாறாக மனித நாகரீகம் அமோகமாக வளர ஆரம்பித்தது. அந்தக்கால மனிதர்களிடையே பரிபூரணக் குடி அரசு நிலவி இருந்ததாக அறிஞர் மார்க்ஸ் கூறுகிறார். அவர்கள் யாவரும் சமமாகவும் யாவரும் ஒரு நிகராகவும், வாழ்ந்தனர். ஒரு மனிதன் துன்பத்திற்காக எல்லோரும் வருந்தினர். ஒருவனுடைய இன்பத்தில் எல்லோரும் மகிழ்ந்தனர். அப்படி இருந்ததினாலேயே கூட்டத்தின் ஒற்றுமை சாத்தியப்படுவதாக இருந்தது. இன்றைக்கு நாம் மனித உரிமைகள் என்று எவை எவை பெறவேண்டுவதற்காக நம் இரத்தத்தைச் சிந்தி, உயிரைக்கொடுத்து, உழைப்பை வீணாக்கி இடைவிடாமல் போராடிக்கொண்டிருக்கிறோமோ அந்த உரிமைகள் எல்லாம் அந்தக்கால மனிதனுக்கு இருந்தது. பேச்சுரிமை இருந்தது. நினைக்க உரிமை இருந்தது. தொழ உரிமை இருந்தது. விவாக உரிமை இருந்தது. விவாகரத்து உரிமையும் மறுமண உரிமையும் கூட இருந்தது, சட்டத்திற்கு விரோதமான காரியம் என்று எதுவுமே இல்லை. எது எது மனிதனுக்குச் சவுகரியமானதோ எவை எவை மனிதர்களுக்குத் தேவையாக இருந்ததோ அவை எல்லாம் சட்ட பூர்வமான, சட்ட சம்மதமான காரியங்களாகவே இருந்தன. அந்தக் காலத்திலும் ஏதோ சில சட்டங்கள் இருந்திருக்கவேண்டும். அதனாலேயே

மனிதக் கூட்டம் ஒற்றுமையாக வாழ முடிந்தது. ஆனால் அந்தச் சட்டங்கள் மனிதர்களுக்கிடையே ஒற்றுமையை யும் கட்டுப்பாட்டையும் வளர்த்தனவே தவிர மனித உரிமைகளில் தலையிடவில்லை.

நிற்க, ஒரு இடத்தில் மனிதக் கூட்டம் வாழத் தொடங்கிவிட்ட தென்றால் அந்த இடத்தில் அவர்கள் உணவுக்காகப்பயன்படும் மிருகங்கள் பயந்துகொண்டு ஓட ஆரம்பித்தன. ஆடு மாடு போன்ற விலங்குகளை இவர்களே வளர்த்துவந்தாலும் பெரிய மனிதக் கூட்டத்தின் பசியின் பூரணத் தேவையையும் பூர்த்தி செய்ய அவை போதுமான தாக இல்லை. மாமிசத்தைச் சாப்பிடுவதைவிட அதிகமாக அவன் தாவர உணவைப்பெற வேண்டும் என்னும் அவசியம் ஆயிற்று. ஆரம்ப காலத்தில் சில கூட்டங்கள் பயிர்செய்ய அறிந்திருக்கவில்லை. அதனால் இவர்கள் எங்கெங்கு தாவ ரங்கள் காணப்படுகின்றனவோ அங்கங்கு சென்று கூடா ரம் அடித்துக்கொண்டு அங்குள்ள தாவரங்கள் தீரும் வரை அவற்றைப் புசிப்பது என்று தீர்மானித்தனர். உதாரணமாக ஆரியர்களுக்கிடையே பயிர் செய்யும் முறை அவ்வளவாகப் பழக்கப்பட்டிருக்கவில்லை. அவர்கள் நாடோடிகளாகத் திரிந்துகொண்டே இருந்தனர். அவ் வாறு திரிந்துகொண்டிருந்த ஆரியக் கூட்டங்களில் ஒரு கூட்டம் தான் இந்தியாவிற்கு வந்து திராவிடர்களோடு போர்புரிந்து அவர்களை அடிமைப்படுத்தி அவர்களுடைய செல்வங்களைக் கொள்ளைகொண்டு அவர்களிடமிருந்து பயிர்செய்யும் முறையையும்வெகுவாக அறிந்துகொண்டது. இதற்குச் சான்றாக, இந்தியாவுக்கு வந்த ஆரியர்களைத் தவிர ஐரோப்பாவின் மத்திய பாகங்களுக்கும் இங்கி

லாந்துக்கும் சென்ற ஆரியர்கள் மரக்கறி உணவையே மறந்துவிட்டு விலங்குகளைத் தேடித்திரிபவர்களாகவே இருந்து இன்றளவும் பெரும்பாலும் விலங்குகளையே புசிப்பவர்களாக இருப்பதைக் கூறலாம்.

மனிதக் கூட்டங்கள் மிகப்பல மிகப்பலவாய்ப் பெருகின. கூட்டங்கள் அடுத்தடுத்து வசிக்க ஆரம்பித்தன. இதன்பின் வியாபாரம் ஏற்பட்டது. ஒரு கூட்டத்தினரிடம் பெருவாரியாக இருந்த பொருள்களை மறுகூட்டத்தார் தங்களிடம் அதிகமா இருந்த பொருள்களைக் கொடுத்துக் கைமாற்று செய்து கொண்ட அந்தப் பழக்கம் தான் ஆரம்பத்தில் வியாபாரமாக இருந்திருக்கவேண்டும்.

இந்தச் சமயத்தில் தான் மனிதக் கூட்டங்களிடையே போர்களும், கலவரங்களும் பரவத்தொடங்கின. மனிதர்களின் அமைதியான வாழ்க்கை அடியோடு மாற ஆரம்பித்தது. முதல் முதலில் மனிதர்களின் ஒரு கூட்டத்திற்கும் மறு கூட்டத்திற்கும் போர் வந்ததுக்கு காரணம் வறுமையாகத்தான் இருக்கவேண்டும்.

ஒரு கூட்டத்தாரிடம் உணவுப் பொருள் ஒன்றுமே இல்லை. கூட்டத்தார் பட்டினி கிடக்கவேண்டிய நிலை. தங்களிடம் உணவுக்கு மாறுகக் கொடுக்க இருந்த பொருள்களும் தீர்ந்துவிட்டன. அந்தக் கூட்டத்தாரிடம் அவர்களைத் தவிர வேறென்றும் இருக்கவில்லை. அடுத்த கூட்டத்தாரிடம் நிறைய உணவு இருந்தது. மாற்றிக் கொள்ளக் கணிசமான பொருள் இல்லாமல் அவர்கள் இவர்களுக்கு உணவு கொடுக்க ஒத்துக்கொள்ளவில்லை. விளைந்தது போர்... அன்று இரவு பட்டினி கிடக்கும்

கூட்டத்தார் எதிர்பாராவிதமாக மறு கூட்டத்தாரின் களஞ்சியங்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்திருப்பார்கள். அவ்வளவு தான்.

இதை மனிதக் கூட்டங்கள் பலவும் படித்துக்கொண் டன. அல்லது படித்துக்கொள்ளவேண்டிய நிலைமையில் அந்தக் கூட்டங்கள் இருந்தன. எப்படி சொன்னாலும் சரி... மனிதக் கூட்டங்களுக்கிடையே போர் வெறி நிரம்பிக்கிடந்தது. அதுதான் மனிதன் பிறந்த அன்றைக்கே தோன்றியதாக இருந்தாலும் மனிதனோடு மனிதன் போர் புரிந்து மனிதனை மனிதன் அழித்துக் கொள்ளும் இந்தக் காரியம் பிற்காலத்தில் தான் ஏற்பட்டிருக்கவேண்டும்.

இதைப் போல் இந்தியாவைக் கொள்ளையடிக்க வந்த கூட்டத்தார் தான் ஆரியர்களும் முகமதியர்களும். இவர் கள் இந்த நாட்டிலேயே தங்கவும் ஆரம்பித்தனர். இதன் பின்னும் மங்கோலியர்கள் இந்த நாட்டைப் பல முறை கொள்ளை அடித்திருக்கின்றனர். சரித்திரப் புகழ் பெற்ற செங்கிஸ்கானின் கொள்ளைப்படை எழுச்சிகள் அந்தக் காலத்தில் புகழ் பெற்றிருந்த பலம் பொருந்திய முகமதிய ஆட்சியையே நிலைகுலையச் செய்திருக்கிறது.

மனிதனை மனிதன் கொள்ளை அடிக்க ஆரம்பித்த காலத்தில் தான் மனித சமுதாய அமைப்பே மாறுபடத் தொடங்கியது. கொள்ளைகள் ஏற்பட்ட காலத்தில் அந் தந்தக் கூட்டங்களைச் சேர்ந்த பூசாரிகள் தங்கள் தெய்வங் களை போர்களில் தங்கள் கட்சிக்கு வெற்றி ஏற்படப் பிரார்த்தித்திருப்பார்கள். இதற்கு ஆரியர்களின் புராணங் களிலிருந்து அளவற்ற சான்றுகள் எடுத்துக் காட்டலாம்.

கொள்ளைகள் என்ற பெயர் பிற்காலத்தில் அரசர்கள் ஏற்பட்ட பின் போர்கள் என்று மாறின. அரசர்களின் இட விஸ்தரிப்புக்காகச் செய்யப்பட்ட போர்கள் எல்லாம் மறை முகமாகவும் நேர் முகமாகவும் கொள்ளைகளே ஆகும்.

கூட்டத்தோடு கூட்டம் போர் புரியவேண்டி ஏற்பட்ட காலங்களில் போர் புரியும் கூட்டங்களில் எந்தக் கூட்டத்தில் கட்டுப்பாடும் வலிமை மிக்கவர்களும் அதிகமாக இருந்தார்களோ அந்தக் கூட்டங்கள் வெற்றி அடைந்தன. ஒரு கூட்டத்தில் வலிமை மிக்கவர்கள் பலர் இருந்திருக்கலாம். ஆனால் அந்தக் கூட்டத்தில் ஒரு பலமான கட்டுப்பாடு இல்லாமல் இருந்தால் அந்தக் கூட்டம் போராட்டங்களில் மடமடவென்று சரிந்து விழுவது கண்கூடாக இருந்தது. ஒரு கூட்டத்திற்கு எப்பொழுது கட்டுப்பாடு அவசியமாயிற்றோ அப்பொழுது அந்தக் கூட்டத்திற்கு ஒரு தலைவன் வேண்டும் என்கிற அவசியமும் உண்டாயிற்று.

கூட்டங்களுக்குத் தலைவர்கள் தோன்றினார்கள். தலைவனைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். கூட்டத் தலைவன் எல்லோரைக்காட்டிலும் வலிமைமிக்கவனாகவும் போர்க் காலத்தில் தன் படைகளைத் திறமையோடு ஏவுபவனாகவும் இருந்தான். பின்னால் போர் காலங்களில் மாத்திரமே அல்லாமல் அமைதிக் காலங்களிலும் கூட்டத்தில் சட்டத்தையும் அமைதியையும் நிலைநிறுத்துபவனாகக் கூட்டத் தலைவன் விளங்கினான். தவிர வெற்றி அடைந்த கூட்டத்தார் பிடித்த அடிமைகளை நிர்வகிக்கும் பொறுப்பும், கொள்ளை அடித்த பொருள்களைக் கூட்டத்தின் நன்மைக்காக வைத்துக் காப்பாற்றும் பொறுப்பும் தலைவனைச்சேர்ந்தவை ஆயின.

தலைவன் கூட்டத்தாரிடையே அபாரமான செல்வாக்குடையவனாக விளங்கினான். போரில் தலைவனே தங்களை வெற்றி அடையச் செய்தான் என்று கூட்டத்தார் ஏகமனதாக நம்பினர். ஏன்? அவர்களுக்குப் பல போர்களில் அடைந்த தோல்விகளின் ஞாபகம் மறந்துபோயிருக்காது. தங்களைக் காத்த தலைவனுக்காக மக்கள் எதுவும் செய்யத் தயாராக இருந்தனர். இந்தக் காலத்தில் கண்டிப்பாகக் கூட்டத்தலைவர்களுக்கும் பூசாரிகளுக்கும் இடையே ஒரு செல்வாக்கும் போட்டி ஏற்பட்டிருக்கும். இவ்வாறு ஏற்பட்ட செல்வாக்குப் போட்டி பாகவதத்தில் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. நிகும்பன் என்ற அரசன் (பெயர் சரியாக நினைவில்லை.) தன் ரிஷிகள் சொன்னபடி அரசாங்கத்தை நிர்வகிக்கவில்லை என்ற காரணத்தால் அவர்கள் மக்களின் உதவிகொண்டு அவனைக் கொன்றுவிட்டு அவனுடைய காலைக் கடைந்து ஒரு புத்திரனை உண்டு பண்ணி அவனை அரசனாக்கினார்கள் என்று அந்த வரலாறு கூறுகிறது.

தலைவர்களுக்கும் பூசாரிகளுக்கும் ஏற்பட்ட பூசல்களில் இருவரும் தலைக்குக் கொஞ்சம்விட்டுக்கொடுத்தனர் இருந்தாலும் இதில் தோல்வி பூசாரிகளுடையது தான். ஏனென்றால் மக்களின் அபிமானம் முழுவதும் தலைவன் பங்கிலேயே இருந்தது. இப்பொழுது பூசாரி சமயம் அறிந்து தலைவனைக் கடவுளின் அம்சமானவன் என்று கூறினான். தலைவன் பூசாரியாலேயே கடவுள் அனுக்கிரகம் தன்பால் நிலைத்துவெற்றிக்குக்காரணமாக இருந்ததென்று கூறி பூசாரியின் உயர்வை நிலைநாட்டினான்.

இதனால் பூசாரிகளும் தலைவர்களும் கடவுளுக்கு அடுத்த படியான மரியாதை பெற்றுவிட்டார்கள். மற்ற

மனிதர்கள் இவர்களிட மிருந்து பிரிக்கப்பட்டார்கள். இதே சமயத்தில் தான் பூசாரியின் சந்ததிகள் பூசாரிகளாக வேண்டும் என்பதற்கு தலைவன் ஆதரவுகாட்டினான். தலைவன் மகன் தலைவனாகவேண்டும் அப்பொழுதுதான் கடவுளின் அம்சம் நிலைத்திருக்கும் என்று பூசாரியும் புளுகினான். இப்பொழுது மக்களுக்கிருந்த தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் போய்விட்டதால் தலைவர்களே தங்கள் கூட்டத்தின் தலை விதி முழுவதையும் நிர்ணயிக்கும் பெரிய ஆசாமிகளாக மாறிவிட்டார்கள்.

இவ்வாறு ஏற்பட்ட தலைவன் பூசாரி அச்சின் பயனாக மற்ற மனிதர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தாழ்த்தப்பட்டார்கள். தங்களுடைய அச்சு என்றென்றும் நிலைத்திருப்பதற்காக, தங்களுடைய பட்டமும் பதவியும் பரம்பரையாக மனித சமுதாயத்திலே மறையாமல் இருப்பதற்காக, நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குத் தங்களுடைய சந்ததிகள் ஆள்வோர் கூட்டமாக இருப்பதற்காக இவர்கள் மேலும் மேலும் சதி செய்ய ஆரம்பித்தார்கள்.

முன்னர் மனிதன் தானாக விரும்பித் தலைவனுக்கும் பூசாரிக்கும் பணிந்து நடந்ததுபோக இப்பொழுது அஞ்சி ஒடுங்கும்படி செய்யப்பட்டார்கள், செல்வாக்கினால் மற்றவர்களை அடக்கி ஆண்டு வந்த இந்த அச்சு நாளாக நாளாக ஆயுதபலத்தைக் கொண்டும் அடக்க ஆரம்பித்தது.

சுயநலம் கொண்ட இந்தக் கும்பல், அந்தக் காலத்திய வாழ்க்கை நிலையில் மிகவும் பாடுபட்டு வாழ்க்கை நடத்த வேண்டியிருந்த அந்தக் காலத்தில், தாங்கள்

வருந்தி உழைக்காமல் பிழைப்பதற்காக, மற்றவர்கள் தங்களை மதிப்பதற்காக, பிறர் தங்களைக் கண்டு அஞ்சி ஒடுங்கி ஏவல் செய்பவர்களாக இருப்பதற்காக மேலும் மேலும் கடவுளையும் அவருடைய பெருமைகளையும் பிறர் நம்பும்படிச் செய்து வந்தது. இதை எதிர்த்துப் பல மனிதர் குழு புரட்சிகளைச் செய்திருக்கிறது. தன் ஏவலுக் கடங்கும் போர் வீரர்களைக் கொண்டும், பிற குழுக்களிலிருந்து கைதிகளாகப் பிடித்து அடிமைகளாக வைத்துக் கொண்டிருந்தவர்களைக் கொண்டும் இந்தப் புரட்சிகளை எல்லாம் தலைவன் பூசாரி அச்சுமுறியடித்து விட்டது. இதன் பயனாக மக்கள் மேலும் மேலும் அடிமைகளாக ஆக்கப்பட்டார்கள். அவர்கள் மனதில் மேலும் மேலும் அச்சம் விளைவிக்கப்பட்டது. மேலும் மேலும் மூடத் தனம் வளர்க்கப்பட்டது.

கடவுளின் பெயரால் நடந்த கோரக் கொலைகள் எத்தனை எத்தனை? தென்னாட்டில் மாத்திரம் எத்தனை சமணர்கள் கழுவில் கதறி மடிந்திருக்கின்றனர்.

இயற்கையாக மனிதன் அறிவு பரவாத அந்தக் காலத்திலேதான் கண்ணில் கண்ட கருத்தில் உணர்ந்த கதிர், கடல், மலை, நதி, காற்று போன்ற இயற்கைகள் அவை எப்படித் தோன்றின, ஏன் இருக்கின்றன, எப்படி இயங்குகின்றன என்பனவற்றை அறியாமல் இருந்ததனாலும், பயங்கரமான இயற்கைக் குமுறல்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் திறமை யின்மையினால் ஏற்பட்ட அச்சத்தினாலும் தன் சக்திக்கு மீறிய ஏதாவது ஒன்று இருக்கவேண்டும் என்று நம்பினதிலிருந்தும் எழுந்த கடவுள் நாளுக்கு நாள் வளர்ந்து நாளுக்கு நாள் மக்களை மூட இருளில் புதைத்துக்கொண்டே போயிருக்கிறார்.

கடவுள்களைச் சுற்றிப் பின்னப்பட்ட மதங்களும் இதற்குச் சாதகமாகவே இருந்திருக்கின்றன.

எல்லா தேசத்தில் தோன்றிய எல்லா மதங்களும் முதலாவதாக அரசன் பூசாரி அச்சை அதாவது அரசனும் பூசாரியும் மாத்திரமே சமூகத்தின் பாதுகாவலர்கள் என்பதை ஒரு உருவத்தில் அல்லாவிட்டால் வேறு உருவத்தில் அங்கீகரித்துவிட்டன. இதனால் எந்த மதமும் மனிதனுக்கு அவனுடைய உண்மையான மதிப்பை அளிக்கவில்லை. தவிர அந்தக் காலத்திலிருநத மனிதர்கள் முரடர்களாகவும் முட்டாள்களாகவும் இருந்ததால் மத ஆசிரியர்கள் தங்களைக் கடவுள்களின் அம்சமாகக் கருதிக் கொண்டார்கள். அதனால் அவர்கள் மனிதர்கள் அத்தனை பேருமே பாபிகள் அல்லது பாபத்தின் பயனுப் பிறந்தவர்கள் என்றே கூறினார்கள்.

இரண்டாவதாக எல்லா மதங்களுமே அந்தக் காலத்தில் அந்த மனிதர்கள் தங்கள் கடவுளுக்கு எந்த உருவம் இருக்கவேண்டும் என்று விரும்பினார்களோ அந்த உருவத்தைக் கொடுத்துவிட்டன. சில மதங்கள் வேறு உருவங்களைக் கலைக்கவும் செய்தன.

மூன்றாவதாக அந்தக் கடவுள் மனிதனைவிட எல்லா விதங்களிலும் சிறந்தவர், பெருமை மிக்கவர், வலிமை படைத்தவர், மனிதர்களால் செய்ய முடியாத எல்லா காரியங்களையுமே அவர்களாலும் அவர்களுடைய தேவதைகளாலும் செய்ய முடியும் என்று நம்பினார்கள்.

நாலாவதாக, இயற்கையினிடத்தில் பொருந்திக் கிடக்கும் பெருமைகள் எல்லாம் இறைவன் படைத்தவை

என்று கூறி மனிதனை இறைவன் பெருமையைப்பற்றிக் கற்பனையும் செய்யக் கூடாத அளவிற்குத் தூக்கி வைத்தனர்.

இவ்வளவையும் நீக்கிவிட்டுப்பார்த்தால், "மனிதா உன் துன்பங்கள் அளவில் அடங்கா..." என்று ஆரம்பித்து மனித வாழ்வின் குறைபாடுகளை எல்லாம் சுட்டிக் காட்டி மனிதன் தன் துயரங்களைக் கண்டு தேம்பித் தேம்பி அழுகச் செய்து இந்தத் துயரங்களிலிருந்து விடுபட இறைவன் அருளைப்பெறுவது ஒன்றுதான் வழி என்று மனிதனை நம்பச் செய்த ஒன்றுதான் மதம் செய்த பெரும் காரியமாக இருக்கும். இதற்காகச் சில ஒழுங்குகள், மனப்பண்புகளை அடையச் சில மார்க்கங்கள் இவையும் மதத்தில் காணக்கூடும்.

புத்த சமண மதங்கள் முதல் நான்கு காரியங்களையும் செய்யாமைக்குக் காரணம் அவை அரச பூசாரிக் கூட்டங்களின் மாய் மாலத்தில் அகப்படாத தனி மனிதர்களால் உண்டாக்கப்பட்டதுதான்.

மதத்தில் என்னென்னவோ அரியவிஷயங்கள் புதைந்து கிடப்பதாக ஆயிரம் கதைக்கின்ற மனிதர்கள் இன்றைக்கு நமது சமுதாயத்தில் ஏராளமானவர்கள் இருக்கின்றனர். வேதங்கள், உபநிஷதங்கள், ஆகமங்கள், யோகங்கள் என்று என்னென்னவோ அவர்கள் கூறுவதைப் பார்த்தலே நமக்குப் பிரமை தட்டிவிடுமோ என்று அஞ்சும்படியாக இருக்கும்.

ஆகா......அந்த வேதங்களும் உபநிஷதங்களும் ஆகமங்களும் என்னதான் சொல்கின்றன என்று உள்ளே

புகுந்துபார்த்தால் வெறும் சொள்ளையாக இருக்கும். மேலே கூறிய நான்கு பொருள்களும் இயற்கை வர்ணனை களும், இன்றைய விஞ்ஞானத்தில் மனிதன் உணர்ந்திருக் கும் உண்மைகள் சிலவும் இருக்கும். இவற்றை நீக்கி விட்டால் மனித வாழ்வு நிலைக்காதது. துன்பம் நிறைந் தது என்ற ஓலமும் ஒப்பாரியும்தான் மிச்சம்.

இந்தத் துன்பங்களிலிருந்து நீங்குவதற்கு வேதங்க ளும் ஆகமங்களும் வழிகாட்டி இருக்கின்றனவா என்றால், ஆகா... பேஷாக... என்றே கூறவேண்டும். என்ன வழி தெரியுமா...? மனிதன் பிறக்காமலேயே இருக்க வேண் டும். பிறக்கும் தன்மையை மனிதன் நீங்கிவிட வேண்டும். அதுதான் வழி! இதற்குத்தான் சுலபமான வழி இருக் கிறதே. அக்காலத்தில் இருந்த அத்தனை ஆண்களையும் பெண்களையும் முழு பிரமச்சாரிகளாய் இருக்கும்படி கட்டளை இட்டிருந்தால் ஒரே வழியாய் இந்தத் துன்பங் கள் தீர்ந்திருக்கும். ஆனால் அப்படிச் சொன்னால் முடி யாது என்பது மகாபுத்திசாலிகளான அந்த மத ஆச்சாரி யார்கள் தெரிந்துவைத்திருந்தார்கள். அதற்காகப் பிறந்து விட்ட பாவிகளே நீங்கள் பகவானைத் தொழுங்கள், தொழுங்கள் என்று இடைவிடாது போதித்தார்கள். இன்னும் அதிகமாகப் போனால், வாழ்வை வறட்டிக் கொண்டு இருந்தும் இறந்த பிணங்களாய், உணர்ச்சியற்ற மரக்கட்டைகள் போல் வாழ்வதற்கான வழிகள் பல வற்றை மிகவும், மிகமிக அரும்பாடுபட்டுக் கண்டுபிடித்துக் கூறியிருக்கின்றனர். இவை உண்மையானபடி கைக் கொள்ள எந்த மனிதனாலும் இயலாதவை என்பதை இன்னொருவர் உணர்த்தித் தெரிந்துகொள்ள வேண்டாம். ஏன் என்றால் உலகில் யாருமே இவற்றை உண்மையாய்ப்

பின்பற்றுவார் இல்லை. இங்கிலேயில் இன்றைய மதத்தைச் சுற்றிலும் இருப்பவை வெறும் மூட நம்பிக்கைகள் தான். இன்றைய கடவுளைச் சுற்றி இருப்பவைகளோ...எண்ணிக் கொள்ளுங்கள். சொல்கிறேன்.

1. மூடபக்தி.

2. எண்ணற்ற பொருட் குவியல்கள். தங்கங்கள்.

3. ஏராளமான நிலபுலன்கள். அழகான சிற்ப வேலைப் பாடுகள் அமைந்த கோபுரங்கள்.

4. இந்தக் கடவுள்களின் பெயரால் கொள்ளையடிக்கும் முதலாளிக் கயவர்களுக்குச் சாதகமான விதி என்னும் மூட நம்பிக்கை.

5. இந்தக் கடவுள்களால் உயிர் பிழைத்து வேறு ஒரு வேலைக்கும் உதவாக்கரைகளாக இருந்துகொண்டிருக்கிற கொழுத்த பூசாரிகளின் திருக்கூட்டம்.

6 இன்னும் பகவான் திருப்பணிக்காக உடல் மினுக்கி கோவில் சென்று காமுகர்களுக்காகக் காத்திருந்து கண்வலை வீசும் கணிகையரும் சில குலமகளிரும்,

இப்படி இப்படி......

எல்லாவற்றிற்கும் மேலாக போலியான, இன்றைய சமுதாய வாழ்க்கை இந்த மதக் கொள்கைகளை சுற்றிச் சுற்றியே கட்டப்பட்டிருக்கிறது.

இந்த சமுதாயம் எந்த மனிதனையும் நேர்மையாக வாழவிடவில்லை. ஆயிரக்கணக்கான ஏற்றத்தாழ்வுகளுக் கிடையிலே மனித குலம் வாடி வதங்கி நசித்துக்கொண் டிருக்கிறது. எந்த மனிதனுக்கும் உண்மையான

R34
N48



வாழ்க்கையையும் இன்றைய சமுதாய அமைப்பு அளிக்க வில்லை. வெளிப்பகட்டும் வீண் முழக்கமும் வெற்றுரை யும் ஆர்வாரமும் நிறைந்ததாக யாருக்கும் உதவாததாக இருக்கிறதே தவிர 'வாழ்ந்தோம்' என்னும் திருப்தி அடை யும்படியான வாழ்க்கையை ஒரு மனிதனுக்கும் இந்த சமுதாயம் அளிக்கவில்லை.

இன்றைய சமுதாய அமைப்ப தகர்க்கப்படவேண்டும் என்று யாவரும் விரும்புகின்றனர் கடவுளைத் தொழு பவனும் தொழாதவனும் இன்றைய கொடுமையான சமு தாய அமைப்பு முறை தொலையவேண்டும் என்று விரும்பு கிறான். உண்மையாக மனிதன் நல் வாழ்க்கை பெற வேண்டுமானால், மனிதன் வாழ்க்கையில் இன்பமும் அமைதியும் மனத்திருப்தியும் அடையவேண்டுமானால் மனித இனம் சந்தோஷமும் சாந்தியும் பெற்று பெருகித் தழைக்கவேண்டுமானால் இன்றைய சமுதாய அமைப்பு மாற்றப்படவேண்டுமானால் அது எந்தமத அடிப்படையைச் சுற்றிப் பின்னப்பட்டிருக்கிறதோ அந்த அடிப்படை வேரோடு வெட்டி எறியப்படவேண்டும். மத அடிப்படை தொலையவேண்டுமானால் அந்த மதத்தின் ஆணிவேராகிய கடவுள், ஆதி மனிதனின் அறியாமையின் மேல் பிறந்து அவனுடைய அச்சத்தின் மேல் சுயநலக் கூட்டத்தாரால் வளர்க்கப்பட்ட கடவுள் வீழ்த்தப்படவேண்டும். ஆம்... அதுவே நமது முதல் கடமையாகும்.

நாம் விரும்புகிறோம் மனித இனம் செழிக்கவேண்டும் என்று. அதனால் நாம் முழங்குவோம்...ஒழிக...கடவுள் ஒழிக... என்றே...!

★

TAMIL NADU ARCHIVES

நீங்கள்
இன்னும் வாங்கவில்லையா?

அறிஞர்
சுப. நாராயணன்
எழுதியவை

ஆரியப் புல்லுருவி
விலை அணா ஆறு

மதம்பிடித்த
படாதிபதிகள்
விலை அணா நான்கு

தெளிந்த சிந்தனை
தேர்ந்த கருத்துக்கள்

வியாபாரிகளுக்கு
தகுந்த கமிஷன் உண்டு

எரிமலைப் பதிப்பகம்
துறையூர், ★ திருச்சி Dt.

PRINTED AT THE STAR PRESS, TURAIYUR.